Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



TANRECTA SPEAKS OCTOBER - 2019

**TANRECTA SPEAKS** **OCTOBER - 2019**

Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with
prepayment with postal Reg. No. Try/041/2017 - 2019
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

______________________________

______________________________

______________________________

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திருப்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

**பதிப்பாசிரியர் குழு**

1. **முனைவர் T.N. கோகுல்நாத் பாபு**, மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்**, மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **பேரா. எம். பாலசுப்ரமணியன்**, மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் ந. மாரிசாமி**, மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் ம.இராஜகோபால்**, மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்**, மாநிலத் துணைத் தலைவர்
7. **பேரா. S. சிவசண்முகம்**, மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. S. சந்திரா**, மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121
Email : tanrectatrichy@gmail.com

# TANRECTA SPEAKS

**Voice - XVIII** **OCTOBER - 2019** **Speech 4**

**Published on 5th of Every Month**

TANRECTA

# தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

**பதிவு எண். 236/2000**



*பேரா. நரசிங்கம்*

**Tamil Nadu Retired College Teachers' Association**
**Newspaper Regn. No. TNBIL/2003/12746**
**Website: www.tanrecta.org**
**Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40**

**Muthukkalathi Street,**
**Tiruvallikkeni,**
**Chennai - 600 005**

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில் விலங்கியல் துறைத் தலைவராகவும், பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் S.R.C. கல்லூரியிலும் தேர்வு நெறியாளராகப் பணிபுரிந்து ஓய்வுப்பெற்ற பேரா. முனைவர் V. சேதுவின் மறைவிற்காகவும், முசிறி அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் பணியாற்றிய பேரா. பத்மா அவர்களின் துணைவர் ஆடிட்டர் ராமநாதன் மறைவிற்காகவும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் அவர்கள் தஞ்சையில் நடைபெறவுள்ள நமது கழகத்தின் பத்தொன்பதாம் மாநில மாநாட்டில் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொள்ள வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

மாநிலச் செயலாளர் அவர்கள் தன் உரையில் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் உள்ள புதியக் கல்விக் கொள்கையைக் குறித்து சாதகபாதகங்களைப் பற்றி மிக விரிவாகப் பேசினார். மேலும் அவர் நமது உறுப்பினர்களின் ஓய்வூதியத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை எடுத்துரைத்தார்.

அடுத்து, செப்டம்பர் மாதம் பிறந்தநாள் காணும் நம் கிளை உறுப்பினர்களின் பெயர்களை கிளைச் செயலாளர் முனைவர் து. முரளிஜி வாசிக்க அனைவரும் கரஒலிமூலம் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் நிஜாமுதீன் (ஜமால் முகமது கல்லூரி) V. ரங்கராஜன் (தூயவளனார் கல்லூரி) ஆகியோர் உறுப்பினர்களுக்கு இனிப்பு, தேநீர் வழங்கி மகிழ்ந்தனர். அடுத்ததாக, பேரா. ஜனார்தனன் எழுந்து வயதில் மூத்த பேராசிரியர்களை சந்தித்து நாம் ஆறுதல் கூறுவது நன்றாக இருக்கும் எனவும், அவர்களுக்கு ஆயுள் சந்தா பெற்றுக் கொண்டு, TANRECTA மாத இதழை அனுப்பிவைக்கலாம் எனவும் கருத்து தெரிவித்தார்.

நடைபெற உள்ள மாநாட்டுக்கு விளம்பரங்களையும் கட்டுரைகளையும் விரைந்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மாநாட்டுக்கு செல்வோர் பெயர்கள் பெறப்பட்டன. அவர்களில் தனிப்பேருந்தில் செல்ல விரும்புவோர் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. தனி சிறுபேருந்து ஏற்பாடு செய்வதற்கு கிளை துணைத் தலைவர் பேரா. கு. கண்ணன் அவர்கள் ஏற்பாட்டாளராக தெரிவு செய்யப்பட்டார். மாநாட்டில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் போக்குவரத்து மற்றும் பேராளர் கட்டணம் கிளை செலுத்திவிடும் என முடிவாகியது. இணைசெயலர் முனைவர் து. முரளிஜி நன்றி கூற, கூட்டம் நிறைவுக்கு வந்தது.

**அடுத்த மாதக் கூட்டம் 12.10.2019 அன்று மாலை 5.00 மணிக்கு தில்லைநகர் கி.அ.பெ. விசுவநாதன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும்.**

முனைவர் **து. முரளிஜி**
இணை செயலர், திருச்சி கிளை.





## தலைவர் பக்கம்

அன்புள்ள பேராசிரியர்க்கு, வணக்கம்.

நம் அமைப்பின் 19வது மாநில மாநாடு தஞ்சைத்தரணியில் வெகு சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. இத்தனை சிறப்புடன் நடத்திய தஞ்சைக்கிளை பொறுப்பாளர்களுக்கும், நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைய உறுதுணையாக செயல்பட்ட பேராசிரியர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை ஆட்சிக்குழு உரித்தாக்குகிறது. விளம்பரங்களையும், தங்கள் படைப்புகளையும் கொடுத்து மாநாட்டு மலரை அலங்கரித்த நல் உள்ளங்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நம் பொதுக்குழு பல முடிவுகளை எடுத்திருக்கிறது. அந்த முடிவுகளை செயல்படுத்துவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். கிளைத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிளையின் நலன் மற்றும் இயக்க நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்ற உறுதியாக ஆர்வமுடன் செயல்படுகின்ற பேராசிரியர்களை கண்டுபிடித்து தேர்ந்தெடுங்கள்.

நன்றி.

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு,
மதுரை – 625001. கைப்பேசி : 84282 54243

தோழமையுடன்,
**து.ந.கோகுல்நாத் பாபு**

---

## திண்டுக்கல் கிளை

திண்டுக்கல் கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் (10.9.2019) பொருளாளர் திருமதி மகாலட்சுமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கிளை உறுப்பினர்கள் பெருமளவில் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

கிளைச் செயலர் திரு. மும்மாட்சி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தேசிய கல்விக்கொள்கை 2019 பற்றி உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். நமது தலைமைக்கழகம் "தேசியக் கல்விக் கொள்கை பற்றி" கருத்தரங்கம் நடத்தி தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறது. மிகவும் பாராட்டுக்குரியது.

பொருளாதார மந்தநிலை பற்றிய தங்கள் கருத்துக்களையும் உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள். திருமதி N. மனோன்மணி அவர்கள் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்து, தேநீர் விருந்தளித்தார். திருமதி R. ஜெயப்ரதா தேவி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

பேரா. **கா. சிவசுப்ரமணியன்,**
தலைவர், திண்டுக்கல் கிளை.

ஆயுத பூஜை, விஜயதசமி மற்றும் தீபாவளிப் பண்டிகை நல்வாழ்த்துக்கள்
**- ஆட்சிக்குழு**

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் வரலாற்றில் தஞ்சாவூரில் நடைபெற உள்ள பத்தொன்பதாவது மாநாடு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு ஆகும். இவ்வமைப்பின் வளர்ச்சியையும் எழுச்சியையும் எடுத்துக்காட்டும் வகையில் அமையும் என நம்புகிறேன்.

புதிய கல்விக்கொள்கை 2019 வரைவு அறிக்கை நடுவண் அரசினது ஒப்புதல் பெறாமல் உள்ள நிலையிலேயே தமிழக அரசு அதனில் உள்ள சில அம்சங்களை நிறைவேற்ற முயற்சிக்கிறது. ஐந்து மற்றும் எட்டாம் வகுப்புகட்கு ஆண்டு இறுதியில் தேர்வு நடத்த அரசு அறிவித்துள்ளது. மிகவும் எதிர்ப்பை பெற்ற பின்பு மூன்று ஆண்டுகட்கு தள்ளிப் போடுவதாக அறிவித்துள்ளது. அதே போன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் பகவத் கீதை பாடநூல் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. எதிர்ப்புகள் அதிகரித்தவுடன் பகவத்கீதை ஒரு விருப்பப் பாடம் என மாற்றி அறிவித்துள்ளார் துணைவேந்தர் சூரப்பா அவர்கள். பள்ளிக்கு வரும் மாணவர்கள் சாதிக்கு ஒரு கலர் கயிறு கையில் கட்டுவது என்று பின்பற்றியதை தடைசெய்து பள்ளிகல்வித் துறை செயலாளர் ஆணை வழங்கினார். பள்ளிக்கல்வித் துறை அமைச்சரை செய்தியாளர் இது பற்றிகேட்டபோது தனக்கு தெரியாது என்றார். அடுத்து கலர் கயிறு கட்டுவது சரி என்றார். அதன் பின்னர் தற்போதுள்ள நடைமுறை பின்பற்றப்படும் என்று கூறினார். எனவே தெளிவற்ற பார்வை சரியாக கொள்கையற்ற நிலையில் மாண்புமிகு அமைச்சர் உள்ளது தெரியவந்தது. கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் நிகழ்வுகள் நாம் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சில கல்லூரிகளில் முதல்வர்கள் இல்லை. காலி பணியிடங்கட்கு உடனடியாக பதவி உயர்வு வழங்காமல் காலங்கடத்துகின்றனர். அதே போன்று மண்டல இணை இயக்குநர்கள் பணியிடங்கள் சில நிரப்பப்படாமல் உள்ளது. இவற்றையெல்லாம்விட கல்லூரிக் கல்வி இயக்குநர் பணியிடமே நீண்ட காலமாக காலியாக உள்ளது. கல்லூரிகளின் நிருவாகத்தை கண்காணிக்கும் இயக்குநரே இல்லாத நிலையில் இன்று கல்லூரிக்கல்வி உள்ளது. தரத்தைப் பற்றி பேசும் அரசு அதனில் போதிய அக்கரை செலுத்தாமல் உள்ளது மிகவும் கவலையளிக்கிறது.

தற்போது விக்ரவாண்டி மற்றும் நாங்குநேரி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள காலிப் பணியிடங்கட்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின் நிகழ்வுகளையும் தீர்மானங்களையும் இவ்விதழில் வெளியிட முயற்சி மேற்கொள்வோம், கல்வியை காப்போம் என்ற இலட்சியத்துடன் நமது பயணம் தொடரும்.

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள
**இ.பி. பெருமாள்,**
பொதுச்செயலாளர்,

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி – 636705.
தொலைப்பேசி 04342 – 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com





பகிர்ந்து கொண்டனர் மற்றும் பிறந்த நாள் மகிழ்வினை பேரா. கமலா கணேசன் எல்லோருக்கும் லட்டு இனிப்பை வழங்கி பகிர்ந்து கொண்டார்.

இதை அடுத்து கிளையின் பொருளாளர் Dr.K. சுப்ரமணியன் கூட்டத்திற்கு வந்து சிறப்பு செய்த உறுப்பினர்களுக்கும், இனிப்பு, காரம், தேனீர் வழங்கிய நல் உள்ளங்களுக்கு நன்றி கூற, கூட்டம் இனிதே நடந்து முடிந்தது.

**இக்கிளையின் அடுத்த கூட்டம் அக்டோபர் இரண்டாம் சனிக்கிழமை 12-ஆம் நாள் கோவை அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

பேரா.**G.சங்ககமசுவரன்**
இணைச்செயலர், கோவை-நீலகிரி கிளை.

### மயிலாடுதுறை

மயிலாடுதுறை கிளைப் பொதுக்குழுக் கூட்டம் 8/9/2019 ஞாயிறு அன்று அறிவாலயம் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்றது. வந்திருந்தோர் அனைவரையும் பேரா.R.ஞானசேகரன் வரவேற்றுப்பேசினார். பொருளாளர் பேரா.M.தமிழரசன் நன்றி கூறினார். பொதுக்குழுவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மயிலாடுதுறை தமிழ்ச்சங்கம் நமது கிளை உறுப்பினர் பேரா.S.சிவராமன் அவர்களுக்கு "கல்வி நெறிச்செம்மல்" என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தது. அவருக்கு **TANRECTA** மயிலாடுதுறைக் கிளை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. சென்னையில் சிகிச்சை பெற்றுவரும் பேரா.S.முத்துக்குமார் அவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று கூட்டுப்பிராத்தனை மேற்கொள்ளப்பட்டது.

நாகை "நம்பிக்கை" நிறுவனத்தின் கடிதத்தை ஆழ்ந்து பரிசீலித்தபின் இவ்வாண்டு நரசிங்கம் அறக்கட்டளையின் உதவிபெறுவதற்கு அந்த நிறுவனத்தின் பெயரை பரிந்துரைப்பதென்று பொதுக்குழு ஏகமனதாகத் தீர்மானிக்கிறது. கழகத்தின் 19வது ஆண்டு மலரில் ஒரு முழுப்பக்க விளம்பரம் கொடுப்பதென்று ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

பேரா.**சிவ.முருகேசன்,**
செயலர், மயிலாடுதுறை கிளை.

### திருச்சிக் கிளை

திருச்சிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 14.09.2019 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் கி.ஆ.பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. திருச்சிக் கிளைத்தலைவர், முனைவர் ச. ஜூலியன் தலைமை ஏற்று அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாநிலத் தலைவர் முனைவர் கோகுல்நாத் பாபு மற்றும் மாநில பொதுச் செயலாளர் பேரா. இ.பி. பெருமாள் ஆகிய இருவரும் கலந்து கொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



அவர்களையும், நமது கிளையின் துணைத் தலைவர் Dr.C. ரேணுகா அவர்களையும் மற்ற உறுப்பினர்களையும் பாராட்டிப் பேசினார்.

அடுத்து இவ்வாண்டு 80 அகவை முடித்த உறுப்பினர்களில், பூ.சா.கோ.கலை, அறிவியல் கல்லூரியில் தாவரவியல் துறைத் தலைவராக, பல சிறந்த மருத்துவர்களை உருவாக்கிய உயிர் பன்மை வேளாண்மை விஞ்ஞானியும் 43 ஆண்டுகள் கல்விப் பணிபுரிந்த Dr.B. இராசாராம் அவர்களையும் மற்றும் பல அரசு கல்லூரிகளில் முதல்வராகவும் திருநெல்வேலி மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநராகவும் ஓய்வு பெற்றவரும், கிரிக்கெட் விளையாட்டை உயிர் மூச்சாக கருதியவரும். ஒரு காலக்கட்டத்தில் தொலைக்காட்சி, வானொலி வர்ணனையாளராகவும் செயல்பட்ட பேரா. C.S. நரசிம்மன் அவர்களின் கல்விப் பணியைப் பாராட்டி பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டார். மற்றும் இக்கிளையின் உறுப்பினர் Dr.K. முருகேசன் அவர்கள் எழுதி வெளியிட்ட “The Golden Wings”-select poems of poet Dr. Blundur Ka. Moganarangan அவர்களின் தமிழ்கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தலும், மற்றும் இலங்கை மலேசியா, சிங்கப்பூர், மங்களூர் பயண அனுபவங்களை பயணங்களில் நான் அடைந்த பரவசங்கள் என்ற ஏட்டினை எழுதியதற்கு பாராட்டும் முகத்தான் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்விற்குப் பின்னர், நமது கழகத்தின் ஆட்சிக்குத் துணைத் தலைவர் Dr. M. ராஜகோபால் அவர்கள், தஞ்சையில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைத்து உறுப்பினர்களுக்கும், பயணத்தின் பொழுது காலை சிற்றுண்டியின் செலவை ஏற்றுக் கொள்வதாகக் கூற, உறுப்பினர்கள் கரவொலி செய்து தங்கள் மகிழ்வினைத் தெரிவித்தனர். ஆண்டு விழாவின் பொழுது கிளையின் சார்பாக தீர்மானங்களை நிறைவேற்றும்படியும் வேண்டிக் கொண்டார்.

அடுத்து இணைச் செயலர் திரு. சங்கமேச்வரன், 27.9.2019 காலை 7.10க்கு புறப்படும் சதாப்தி விரைவு வண்டியில் D4 பெட்டியில் இருக்கைகள் பதிவு செய்துள்ளதைத் தெரிவித்தார் மற்றும் தஞ்சையில் ஓட்டல் வள்ளியில் 11 அறைகள் தங்குவதற்கு பதிவு செய்துள்ளதைத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து இம்மாத பிறந்த நாள் காணும் 45 உறுப்பினர்களின் பெயர் வாசித்து நீண்ட ஆயுளும், நலமும் பெற்று வாழ வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இவ் உறுப்பினர்களில் பேராசிரியர்கள் 1. C. கோவிந்தராஜ், 2.T.குழந்தைவேலு, 3. T. இளங்கோவன், 4. M. சக்ரபாணி, 5. S.ஆத்மநாதன், 6.O.B. பிரோமோத்குமார், 7.B. கணேசன், 8.R. பாஸ்கர், 9. V. கல்யாணசாமி, 10. C.S. நரசிம்மன், 11. K. விஸ்வநாதன், 12. G.M. நடராஜன், 13.S.கருங்கண்ணன், 14.N. சுரேந்தர பிரசாத், 15. S. புனித குமாரி,16. முருகநாதன், 17. V. கிருஷ்ணன் ஆகியோர் அடையாறு ஆனந்தபவன் இனிப்பு, காரம் மற்றும் தேனீர் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை உறுப்பினர்களிடம்





## மாநிலப் பொருளாளர் அறிக்கை - அக்டோபர் 2019

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

நமது கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் காந்தி ஜெயந்தி, ஆயுத பூஜை, விஜயதசமி மற்றும் தீபாவளிப் பண்டிகை நல்வாழ்த்துக்கள். நமது கழகத்தின் கிளைகளிலிருந்து செப்டம்பர் 2019ல் பெறப்பட்ட உறுப்பினர் கட்டணம், செய்திமடல் நிதி, அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கட்டிட நிதி, கேரளா மற்றும் கஜா புயல் நிவாரண நிதி, AIFRUCTO ஆயுள் சந்தா மற்றும் ஆண்டு சந்தா பற்றிய விபரங்கள்:

**பொறையார் கிளைச்** செயலரிடமிருந்து 2019-20க்கு 2 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 300/-ம், செய்திமடல் நிதியாக ரூ. 400/-ம், அறக்கட்டளை நிதியாக ரூ. 1000/-ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ. 1000/-ம், AIFRUCTO ஆயுள் சந்தா ஒரு உறுப்பினரிடமிருந்து ரூ. 1000/-ம், ஆண்டு சந்தா 2 உறுப்பினர்களுக்கு ரூ. 50/- என ஆக மொத்தம் ரூ. 3750/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் Dr. T. Edmunds , Mrs Vinoliya Joseph) AIFRUCTO Life: Dr. T. Edmunds.

**தஞ்சாவூர் கிளைச்** செயலரிடமிருந்து 2019 - 20க்கு 6 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 900/ம், செய்திமடல் நிதியாக ரூ.1200/ம், அறக்கட்டளை நிதியாக ரூ.500/-வீதம் ரூ.3000/-ம், கழக வளர்ச்சி நிதியாக 5 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 2500/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா, 6 உறுப்பினர்களுக்கு ரூ.150/ம், கட்டிட நிதியாக 3 உறுப்பினர்களிடமிருந்து ரூ. 12,000/ம் (Prof. S.பிச்சை - 5000, Prof. S. சுப்பிரமணியன் - 5000, Prof. V. கோவிந்தராஜன் - 2000) என ஆக மொத்தம் ரூ. 19750/ பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் : Dr. S. Kamaraj, Dr. Amutha Pandiyan, Prof. S. Shanmugam, Prof. P. Faustina Malliga, Dr. Ponnammal Fredarick Joseph).

**நாமக்கல் கிளைச்** செயலரிடமிருந்து 2019 - 20க்கு 20 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 3000/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 20 உறுப்பினர்களுக்கு ரூ. 500/-ம், ஒரு புதிய உறுப்பினரின் செய்திமடல் நிதி ரூ. 200/- என ஆக மொத்தம் ரூ. 3700/- பெறப்பட்டுள்ளது. (Prof. S. கோவிந்தராஜன்).

**திருவண்ணாமலை கிளைச்** செயலரிடமிருந்து 2019 - 20க்கு 2 உறுப்பினர்களின் AIFRUCTO ஆயுள் சந்தா ரூ. 2000/- பெறப்பட்டுள்ளது. (Prof. G. Subramanian, Dr. S. Kumaresan)

**திருவாரூர் கிளைச்** செயலரிடமிருந்து 2019 - 20க்கு 23 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 3450/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 23 உறுப்பினர்களுக்கு ரூ. 575/-ம், கட்டிட நிதியாக 3 உறுப்பினர்களிடமிருந்து தலா ரூ. 5000/- வீதம் ரூ. 15000/- என ஆக மொத்தம் ரூ. 19,025/- பெறப்பட்டுள்ளது. (Prof. K. Kesavan, Prof. M. Arulanandasamy, Dr.G. Ramanathan)

**கன்னியாகுமரி கிளைப்** பொருளரிடமிருந்து 2016-17க்கு ஒருவர் 2017-18க்கு 7பேர், 2018-19க்கு 4பேர், 2019-20க்கு 45 உறுப்பினர்கள் என மொத்தம் 57 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.8550/ம், 2019-20க்கு 6புதிய உறுப்பினர்களின் செய்திமடல் நிதியாக ரூ.1800/ம், 2019-20க்கு AIFRUCTO ஆயுள்சந்தா 10 உறுப்பினர்களுக்கு ரூ.10,000/ம், கட்டிட நிதியாக கிளையிலிருந்து ரூ.10,000/- என ஆக மொத்தம் ரூ.30,350/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள்:- Dr. P. Geetha,

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



Dr. P. Nirmala, Dr. S. Robert Gnanamony, Dr. Mary Saroja, Dr. Alankara Vasanthi, Prof. L. Kamakshi) (AIFRUCTO **ஆயுள் உறுப்பினர்கள்:-** Prof. A. Bernard Chandra, Dr. V. Hermana Gilt Arachi, Dr.Major S.S.Hector, Prof.Ophelia Miranda, Prof.A.Raymond Rodrigo, Dr.P.Geetha, Prof.L.Kamakshi, Dr.P. Nirmala, Dr.Alankara Vasanthi, Dr.Mary Saroja.)

**மயிலாடுதுறை கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 65 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.9750/-ம், செய்திமடல் நிதியாக 3 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.600/-ம், AIFRUCTO ஆயுள்சந்தா Prof.P.Maria Lazer அவர்களுக்காக ரூ.1000/-ம், ஆண்டு சந்தா 51 உறுப்பினர்களுக்கு ரூ.1275/-ம், அறக்கட்டளை நிதியாக கிளை சார்பாக ரூ.7500/-ம், கழக வளர்ச்சி நிதியாக கிளை சார்பாக ரூ.7500/-ம் என ஆகமொத்தம் ரூ.27,625/-ம் பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள்: பேரா.கே.ஆறுமுகம், பேரா.எஸ். பாலசுப்ரமணியன், பேரா.எம். நடராசன்)

**கும்பகோணம் கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 7 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1050/-ம், செய்திமடல் நிதியாக 1 புதிய உறுப்பினருக்கு (Prof.T.Alli) ரூ. 200/-ம் என ஆக மொத்தம் ரூ.1250/- பெறப்பட்டுள்ளது.

**உடுமலைப்பேட்டை கிளைச்** செயலரிடமிருந்து 2019-20க்கு 3 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.450/-ம், செய்திமடல் நிதியாக 2 புதிய உறுப்பினர்களுக்கு (Dr.K.Ramasamy, Dr.K.Rangasamy) 400/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 3 பேருக்கு ரு.75/- என ஆகமொத்தம் ரூ.925/- பெறப்பட்டுள்ளது.

**ஈரோடு கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 4 உறுப்பினர்களின் கட்டணம் ரூ600/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 120 உறுப்பினர்களுக்கு ரூ. 3000/-ம், கட்டிடநிதியாக ரூ.2000/- என ஆகமொத்தம் ரூ.5600/- பெறப்பட்டுள்ளது. (கட்டிட நிதி Prof.M.R. சந்தானம்)

**தருமபுரி கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 25 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.3750/-ம், கட்டிட நிதியாக 4 உறுப்பினர்களிடமிருந்து ரூ.17,000/- என ஆக மொத்தம் ரூ.20,750/- பெறப்பட்டுள்ளது. (m/s N.கோவிந்தராஜன் - 5000, T.பாண்டுரங்கன்- 5000, M.ராஜேந்திரன்- 5000, M.அய்யாதுரை - 2000)

**வேலூர் கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 3 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.450/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 3 உறுப்பினர்களுக்கு ரூ.75/- என ஆக மொத்தம் ரூ. 525/- பெறப்பட்டுள்ளது.

**கரூர் கிளைப்** பொருளரிடமிருந்து 2019-20க்கு 28 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.4200/-ம், AIFRUCTO ஆயுள்சந்தா 3 உறுப்பினர்களுக்கு ரூ. 3000/-ம் (Prof.Herbert J.Moris, Dr.K.Murugesan, G.Thirupurasundari), 8 உறுப்பினர்களிடமிருந்து கஜாபுயல் நிவாரண நிதியாக ரூ.4000/-ம் கேரள வெள்ள நிவாரண நிதியாக ரூ.1600/- என ஆகமொத்தம் ரூ.12,800/- பெறப்பட்டுள்ளது.

**விருதுநகர் கிளைச்** செயலரிடமிருந்து 2019-20க்கு 12 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1800/- பெறப்பட்டுள்ளது.

**தூத்துக்குடி கிளைச்** செயலரிடமிருந்து 2019-20க்கு 50 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.7500/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 50 உறுப்பினர்களுக்கு ரூ.1250/-ம், ஆயுள்சந்தா ஒரு உறுப்பினருக்கு ரூ.1000/- என ஆக மொத்தம் ரூ.9750/- பெறப்பட்டுள்ளது. (AIFRUCTO ஆயுள்சந்தா Dr.P.Jeya Baskar)





வந்திருந்த உறுப்பினர்களை மூத்த உறுப்பினர் பேரா. எஸ்.கணேசன் அவர்கள் தலைமையேற்று வரவேற்று பிறகு கூட்ட நிகழ்வுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

**விவாத விவரங்களும் ஏற்கப்பட்ட தீர்மானங்களும்:**

1. ஆகஸ்ட் – செப்டம்பர் மாதங்களில் நிகழ்ந்த கிளை நடவடிக்கைகளை செயலர் எடுத்துரைத்தார்.
2. 2016-க்குப் பின் ஓய்வு பெற்ற பேராசிரியர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியப் பலன்கள் கிடைக்க பெற்ற விவரங்களை செயலர் எடுத்துக் கூறினார்.
3. 2006-க்கு முன் ஓய்வு பெற்ற பேராசிரியர்களில் மூவருக்கு இது நாள் வரை கிடைக்காத ஓய்வூதியப் பலன்கள் விரைவில் கிடைத்திட ஆவன செய்யப்பட்டுள்ளதாக செயலர் கூறினார்.
4. கடந்த 6.9.2019 அன்று துவக்கப்பட்ட திருப்பூர் கிளை பொறுப்பாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இப்பொதுக் குழு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.
5. ஆண்டு சந்தா மற்றும் AIFRUCTO ஆயுள் சந்தா விரைவில் செலுத்துமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
6. 01.9.2019 முதல் அமல்படுத்தப்பட்ட ஊதிய உயர்வின் அடிப்படையில் உயர் துவக்க ஊதியமான ரூ.14,940 கிடைக்கப்பெறாத அரசு நிதி உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்களுக்கும் பதவி மேம்படுத்தப்பட்ட பேராசிரியர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யும்படி மையப் பொறுப்பாளர்களை இப்பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.
7. நீதி மன்ற வழக்குகள் குறித்த விவரங்கள் ஏதேனும் இருப்பினும் அவற்றை நமது இதழில் இடம் பெற செய்யுமாறு இதழின் ஆசிரியர் பொதுச் செயலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**அடுத்த மாத கூட்டம் 9.10.2019 அன்று அருள் மிகு கச்சமேயப்பர் ஆலயத்தில் நடைபெறும் என்ற அறிவிப்புடன் செயலர் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.**

**E.M. சுப்ரமணியன்**
செயலர், காஞ்சிபுரம் கிளை.

## கோவை - நீலகிரி கிளை

இக்கிளையின் 2019 செப்டம்பர் மாதக் கூட்டம் 14.09.19 சனிக்கிழமையன்று கோவை அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் மாலை 4.30 மணியளவில் தொடங்கியது. கிளையின் தலைவர் Dr.M. சக்ரபாணி தலைமை தாங்கி உறுப்பினர்களை வரவேற்று கூட்ட நிகழ்வுகளைத் துவக்கி வைத்தார்.

19-ஆம் ஆண்டு மலரில் நமது கிளையின் சார்பாக அதிக விளம்பரங்களைப் பெற்றுத் தந்த பேரா.மேஜர் T.S.கிருஷ்ணமூர்த்தி

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**இக்கோரிக்கை டான்ரெக்டாவுக்கும் பொருந்தும்**

6. 36-வது டான்ரெக்டா கிளை திருப்பூரில் தொடங்குதற்குப் பாடுபட்டப் பொறுப்பாளர்களைப் பழனிக் கிளை பாராட்டுகிறது.

**அக்டோபர் மாதக் கூட்டம் 09.10.2019 புதன்கிழமை மாலை 5 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெறும்.**

**நன்றியுரை :** இணைச்செயலர் பேராசிரியை மரகதம் சிவானந்தம் நன்றியுரை ஆற்றிடக் கூட்டம் நிறைவுற்றது. கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு மதிய விருந்து அளிக்கப்பட்டது.

பேரா. **துரை. சுந்தரமூர்த்தி,**
செயலர், பழனிக் கிளை. 94437 05850.

**இராமநாதபுரம் கிளை**

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 14.09.2019 சனிக்கிழமை அன்று மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் கிளை துணைத் தலைவர் பேரா.எஸ். சேசுராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகைபுரிந்த உறுப்பினர்களை வரவேற்று பேசிய கூட்டத்தலைவர் கூட்டத்திற்கான கருதுபொருள் பற்றிய விளக்கமும் அளித்தார்கள். 17.09.2019 அன்று திருச்சியில் நடைபெறப் போகும் மாநில செயற்குழு கூட்டம் மற்றும் 28.9.2019 அன்று தஞ்சாவூரில் நடைபெறப் போகும் 19-வது மாநில மாநாடு தொடர்பான தகவல்களை கிளைச் செயலாளர் உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார். கிளையின் சார்பாக நான்கு உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் நிலைமையை பேசப்பட்டது.

கிளை உறுப்பினர் பேரா.முனைவர் R. காசிநாத துரை அவர்கள் “Bioinformatics and its Biological Medical Applcations” என்ற தலைப்பில் உரை ஆற்றினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்கு, மறைந்த பேராசிரியர் M. வைரமணி அவர்கள் நினைவாக, அவரது துணைவியார் திருமதி மலர்விழி அவர்கள் இரவு உணவினை வழங்கினார்கள்.

**அடுத்த மாதாந்திர கூட்டம் 19.10.2019 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.** கிளை பொருளாளர் பேரா.எஸ். அமானுல்லாகான் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

பேரா. **க. ஜீவானந்தம்,**
செயலர், இராமநாதபுரம் கிளை.

**காஞ்சிபுரம் கிளை**

எமது கிளையின் மாதாந்திரப் பொதுக் குழுக் கூட்டம் 11.9.2019 புதனன்று காலை 10.00 மணியளவில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடந்தது.





**சென்னை கிளைச்** பொருளரிடமிருந்து 50 உறுப்பினர்களுக்கு ரூ.7500/ பெறப்பட்டது. சென்னை கிளை உறுப்பினர் Dr.D.Janaki அவர்களிடமிருந்து 2019-20க்கு அறக்கட்டளை நிதியாக ரூ. 5000/- பெறப்பட்டுள்ளது.

**குடியாத்தம் கிளைச்** செயலரிடமிருந்து 2019-20க்கு 20 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.3000/-ம், செய்திமடல் நிதியாக 20 உறுப்பினர்களுக்கு ரூ.4000/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா 20 உறுப்பினர்களுக்கு ரூ.500/-ம் என ஆகமொத்தம் ரூ.7500/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் R.Vimala, Mrs.S.E. Ravi Kandhamani, பேரா.முனைவர் எஸ். பாபு, பேரா.முனைவர் த. கருணாகரன், பேரா.முனைவர் கு.நடராசன், பேரா.முனைவர் மு. வளர்மதி, பேரா.முனைவர் சு. சக்கரவர்த்தி, பேரா.முனைவர் சி.என் கோட்டீஸ்வரன், பேரா.எஸ்.பாண்டுரங்கன், பேரா.செ.இராதாகிருஷ்ணன், பேரா.கு.இரா. இளங்கோவன், பேரா.ஜி.கேசவரெட்டி, பேரா.இரா. சரவணன், பேரா.பி.கோதண்டரெட்டி, பேரா.முனைவர் இல.பிரதாபன், பேரா.எம். பார்வதியம்மாள், பேரா.எம்.சோமு, பேரா.மு. கிருட்டிணன், திரு.முகமது அலிகான், திருமதி.கே.எஸ். சித்ரா)

**சேலம் கிளைப்** பொருளரிடமிருந்து 2018-19க்கு 28பேர், 2019-20க்கு 128 உறுப்பினர்கள் என மொத்தம் 156 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.23,400/-ம், 2018-19க்கு AIFRUCTO ஆண்டுசந்தா 28 உறுப்பினர்களுக்கு ரூ.700/- என ஆகமொத்தம் ரூ.24,100 பெறப்பட்டுள்ளது.

**தஞ்சாவூர் கிளைப்** செயலரிடமிருந்து 2019-20க்கு ஒரு புதிய உறுப்பினரின் கட்டணம் ரூ.150/-ம், செய்தி மடல் நிதி ரூ.200/-ம், AIFRUCTO ஆண்டுசந்தா ரூ. 25/-ம், அறக்கட்டளை நிதி ரூ.500/-ம், கழக வளர்ச்சி நிதி ரூ.500/- என ஆக மொத்தம் ரூ. 1375/- பெறப்பட்டுள்ளது. (Dr.B.Geetharani).

**கட்டிடநிதி :**

| | |
|---|---|
| 8/19 மாதம் வரை கட்டிட நிதி | = ரூ.31,33,775 |
| 9/19 மாதம் பெறப்பட்ட நிதி | = ரூ. 56,000 |
| ஆகமொத்தம் | = ரூ. 31,89,775 |

2019-20க்கு ஆண்டிற்கான சந்தா தொகைகளைப் பெற்று அனுப்புமாறும், புதிய உறுப்பினர்களிடமிருந்து அறக்கட்டளைநிதி, கழக வளர்ச்சிநிதி, கட்டிட நிதிகளைப் பெற்று அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

AIFRUCTO ஆயுள்சந்தா உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலைக் கிளைச் செயலர்கள் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். AIFRUCTO News அனுப்புவதற்கு List அவசியம் தேவைப்படுகிறது. விரைந்து செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்களது தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரி : இந்தியன் வங்கி, திருவானைக்கோவில், திருச்சி, S.B. A/c No. 935236819. IFSC code: IDIB000S110.

**எனது முகவரி :** 3/175, G.R.T. நகர்,
திருவாரூர் - 610 001. செல் : 9443976222
E.mail : indirabalu1@gmail.com

அன்புடன்
பேரா.**M.பாலசுப்பிரமணியன்**
மாநிலப் பொருளர்

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

பதிவெண் : 236/2000.

**பத்தொன்பதாவது மாநில மாநாடு - 28.09.2019.**

**காவேரி திருமண மண்டபம் - தஞ்சாவூர்.**

தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் பத்தொன்பதாவது மாநில மாநாடு 28.09.2019 அன்று தஞ்சாவூர் காவேரி திருமண மண்டபத்தில் எழுச்சியோடு நடைபெற்றது. தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் தொடங்கியதில் ஆர்வத்துடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட செம்மொழி விருது பெற்ற முனைவர் அ. தட்சிணாமூர்த்தி கழகத்தின் கொடியை காலை 8.45 மணிக்கு ஏற்றி வைத்து சங்கம் தொடங்கியது பற்றி விவரித்தார். தொடக்கத்தின் போது தன்னை ஈடுபடுத்திக் கொண்டு சங்கம் செயல்பட உழைத்த பேரா. கோ. கணேச மூர்த்தி அனுபவங்களை கூறினார். பின்னர் முழக்கங்கள் சங்கத்தினை வாழ்த்தி விண்ணதிர எழுப்பப்பட்டன.

இதன் பின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் மாநிலத்தலைவர் முனைவர் டி.என். கோகுல்நாத் பாபு தலைமையில் காலை 9.00 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. மாநில பொதுச் செயலர் பேரா. இ.பி. பெருமாள் மாநாட்டு அறிக்கையை சமர்ப்பித்தார். சென்ற ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இயக்க நடவடிக்கைகள், நீதி மன்ற வழக்குகள், அரசியல் நிகழ்வுகள் ஆகியன பற்றி படித்தளித்தார். இதன் பின்னர் மாநிலப் பொருளாளர் பேரா. எம். பாலசுப்ரமணியன் கடந்த ஆண்டின் வரவு – செலவு பற்றிய விபரங்களை தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின் மூலம் படித்துக் கூறினார். அரங்க நரசிங்கம் அறக்கட்டளையின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையையும் படித்தார்.

பின்னர் மாநாட்டின் தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் முனைவர் டி.என்.கோகுல் நாத்பாபு தலைமை தாங்கினார். குத்து விளக்கேற்றி அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் என். இராசேந்திரன் தொடங்கி வைத்தார். மாநாட்டிற்கு வந்திருந்தோரை வரவேற்புக் குழுவின் செயலாளர் முனைவர் வே. இராமசாமி வரவேற்றுப் பேசினார். மாநாட்டில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் என். இராசேந்திரன் தொடக்கவுரையாற்றினார். மாநாட்டின் தலைவர் முனைவர் டி.என்.கோகுல்நாத் பாபு தலைமையுரையாற்றினார்.

பின்னர் மாநாட்டு மலரை வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாநாட்டு மலர் பற்றிய விபரங்களை மலர்க்குழு அமைப்பாளர் முனைவர் மு. இளமுருகன் விரிவாகக் கூறிய பின் மாநாட்டு மலரை தஞ்சை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் அறிவுடைநம்பி வெளியிட பூண்டி புஷ்பம் அரசு உதவி பெறும் கல்லூரி முதல்வர் அதனைப் பெற்றுக் கொண்டார். தஞ்சை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் அறிவுடைநம்பி, பூண்டி புஷ்பம் கல்லூரி முதல்வர், அகில இந்திய ஓய்வு பெற்ற கல்லூரி மற்றும் பல்கலைக் கழக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் முனைவர் – B.பார்த்தசாரதி, அண்ணாமலை பல்கலைக் கழக ஓய்வூதியர் சங்கத் தலைவர் முனைவர் பக்கிரி சாமி ஆகியோர்





வேதியியல் பேராசிரியர் S. இராமலிங்கம் புதியதொரு செய்தியைக் கூறி அவையினரை வியப்பில் ஆழ்த்தினார். இஸ்ரோ விஞ்ஞானிகளில் ஒருவர் நம் பழனி கணக்கன்பட்டியைச் சேர்ந்த பெண்மணி கௌரிமணி என்பதைத் தெரிவித்தார். அவையினர் கரவொலி எழுப்பிப் பாராட்டினர். இஸ்ரோ தலைமை விஞ்ஞானி பேரா.சிவனையும் பாராட்டினர். இவ்விவாதத்தில் பேராசிரியர் R. பாஸ்கரன் , பேரா. M. தண்டபாணி ஆகியோரும் பங்கேற்றனர்.

தஞ்சையில் நடைபெறவிருக்கும் டான்ட்ரெக்டாவின் 19–வது மாநில மாநாடு பற்றிய செய்திகளைச் செயலர் பேராசிரியர் துரை.சுந்தரமூர்த்தி எடுத்துரைத்தார். அம்மாநாட்டில் பங்கேற்க உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். பேராசிரியர்கள் S. நாகலிங்கம், P. சுப்பிரமணியன், K. கல்யாணசுந்தரி, மரகதம் சிவானந்தம் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்கும் உறுப்பினர்களை வேனில் அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றனர். சுற்றுலா ஏற்பாடுகளை எடுத்துரைத்தனர். தவிர தனியாக மாநாட்டில் பங்கேற்பதற்கு மேலும் பலர் இசைவளித்தனர். மாநாட்டு மலருக்குப் பழனிக்கிளை ரூ. 20,000/–க்கு விளம்பரங்கள் பெற்றுத் தந்துள்ளதையும், படைப்பாளர்கள் தம் படைப்புகளை அனுப்பியுள்ளதையும் செயலர் குறிப்பிட்டார்.

திருப்பூரில் புதியதொரு டான்ரெக்டா கிளை உதயமாகியுள்ளது. அதில் பங்கேற்று வாழ்த்துரைத்த செய்திகளை மாநிலத் துணைத் தலைவர் பேராசிரியர் N. மாரிசாமியும், மாநில இணைச் செயலர் பேராசிரியர் S. சிவசண்முகமும் விரிவாகப் பேசினர். பின்னர் உறுப்பினர்களின் கருத்துரைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பெரும்பாலான உறுப்பினர்கள் மாதாந்திரக் கூட்டங்களை ஒரு மாதம் பகலிலும் மறுமாதம் மாலையிலும் நடத்துமாறு கேட்டுக் கொண்டனர். அக்கோரிக்கை ஏற்கப்பட்டது.

**தீர்மானங்கள் :**

1. சந்திரயான்–2 விண்கலம் நிலவைத் தொடுவதற்குப் பாடுபட்ட இஸ்ரோ விஞ்ஞானிகளைப் பாராட்டுகிறோம்.
2. தஞ்சைத் தரணியில் நடைபெறவிருக்கும் டான்ரெக்டா 19–வது மாநில மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம்.
3. அம்மாநாட்டில் பங்கேற்கும் பழனிக்கிளை உறுப்பினர்களுக்குரியப் பேராளர் கட்டணத்தைப் பழனிக்கிளையே செலுத்துகிறது.
4. நூறு உறுப்பினர்களுக்கு அதிகமாகும் நம் கிளையில், எழுபது பேர் ஜப்ரக்டோ வாழ்நாள் உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். அவர்களுக்கு ஜப்ரக்டோ செய்தி மடல்களை அனுப்புமாறு மையப்பொறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.
5. மற்ற அமைப்புகளைப் போல ஜப்ரக்டோ அமைப்பும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) அளிக்குமாறு ஜப்ரக்டோ பொறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



ஆகஸ்ட் மாதக் கூட்டத்தின் அறிக்கையை தலைவர் வாசிக்க, உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொண்டனர்.

தலைவர் தனது உரையில் ஓய்வூதியம் சம்பந்தமாக கிளை எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். ஸ்காட் கிறித்தவக் கல்லூரியில் மட்டும் ஏறத்தாழ 30 உறுப்பினர்கள் புதிய ஓய்வூதியம் பெறாததை சுட்டிக் காட்டி இப்பிரச்சினை தொடர்பாக தலைவர், செயலாளர், பொருளாளர் மூவரும் திருநெல்வேலி RJD அலுவலகத்துக்கு செல்ல இருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஓய்வூதியர்களும் பண்டிகைக்கால முன் பணமாக ரூபாய் 4000/- கருவூலத்திற்கு விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதை பத்து சம தவணைகளாக ஓய்வூதியத்தில் இருந்து பிடித்துக் கொள்ளப்படும் என்பதையும் தலைவர் குறிப்பிட்டார்.

28.09.2019 அன்று தஞ்சையில் நடக்க உள்ள மாநாடு பற்றி விளக்கிச் சொல்லி, நமது கிளையின் சார்பில் ரூபாய் 34,000 விளம்பரம் மூலமாக அனுப்பப் பட்டிருப்பதையும் குறிப்பிட்டார். மாநாட்டில் நாம் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்து பேராளர் கட்டணம் ரூபாய் 250/-ஐ கலந்து கொள்ளும் அனைவருக்கும் நமது கிளையே ஏற்கும் என்றும் குறிப்பிட்டார்.

பேரா. S. வாட்சன் டேவிட் ஜெயராஜ் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

**அடுத்த கூட்டம் 8.10.2019 அன்று வழக்கம்போல மாலை 4.30 மணிக்கு YMCA அரங்கில் வைத்து நடைபெறும்.**

பேரா. டாக்டர். **S. குமாரசுவாமி,**
செயலர், கன்னியாகுமரிக்கிளை

### பழனி கிளை

பழனிக் கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 10.9.2019 செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெற்றது. கிளைத் தலைவர் பேரா. S. இரத்தினசபாபதி தலைமையேற்றார். பேரா. கோமதி K. சிவன் இறைவணக்கப் பாடலைப் பாடினார்.

பேராசிரியர்கள் S. சரத்சந்திரன், S. முனியாண்டி, P. சுப்பிரமணியன் ஆகியோர் செப்டம்பர் மாதம் பிறந்தநாள் காண்கின்றனர். அவர்களைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தித் தலைவர் வாழ்த்துரைத்தார். தொடர்ந்து, இஸ்ரோ விஞ்ஞானிகள் சமீபத்தில் நிலவின் சந்திரயான் -2 விண்கலத்தைச் செலுத்திய நிகழ்வுகளைச் சொன்னார். அவரைத் தொடர்ந்து நம் கிளையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் S.P. மாணிக்கம் பேசினார். இஸ்ரோ விஞ்ஞானிகளின் அரிய முயற்சியை பாராட்டினார். சந்திரயான்-2 விண்கலம் நிலவைத் தொட்டிறங்கியபோது சிறிது சுணக்கம் ஏற்பட்டது. அதற்கு காரணம் சூரிய ஒளி எட்டாத ஒரு பகுதியில் சந்திரயான்-2 இறங்கியதாலும், புவிஈர்ப்பு விசை (Gravitational force) அதிகமானாதாலும் அந்த எதிர்பாராதக் கோளாறு ஏற்பட்டதென்றார்.





மாநாட்டை வாழ்த்தி பேசினர். பின்னர் தஞ்சை கிளையின் பொருளாளர் பேரா. ஆ. இராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**இரண்டாம் அமர்வு :** மாநாட்டின் இரண்டாம் அமர்வு மாநிலப் பொருளாளர் பேரா. எம். பாலசுப்ரமணியன் தலைமையில் அரங்க நரசிங்கம் அறக்கட்டளையின் நல நிதி வழங்குதல் மற்றும் 80 வயதைக் கடந்த உறுப்பினர்களை பாராட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரை வரவேற்று அறக்கட்டளை நிர்வாகக் குழு உறுப்பினரும் தூத்துக்குடி கிளையின் செயலாளருமான பேரா. ம. கமல்ராஜ் வரவேற்று பேசினார். இந்நிகழ்ச்சியின் தலைவரது தலைமையுரைக்குப்பின் அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் பெரியார் கிராம வளர்ச்சி திட்ட இயக்குநருமான முனைவர். D.ஜானகி அரங்க நரசிங்கம் அறக்கட்டளையின் நல உதவிகளை 12 கிளைகட்கு வழங்கி சிறப்பித்தார். இதன் பின்னர் 80 வயதைக் கடந்த உறுப்பினர்கட்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ் அளித்து சிறப்பித்தார். பின்னர் வாழ்த்துரை வழங்கினார். தஞ்சை கிளையின் தலைவர் முனைவர் குமாரவேலு நன்றி கூறினார்.

**பாராட்டு :** இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெரியார் கிராம வளர்ச்சி திட்ட இயக்குநர் முனைவர் D.ஜானகி அரங்க நரசிங்கம் அறக்கட்டளைக்கு ரூ. 5,000 நன் கொடை அளித்தார். மிகவும் பாராட்டுக்குரியது.

உணவு இடைவேளைக்குப் பின்பு மாநிலப் பொதுக்குழுவினர் இரண்டாம் அமர்வு மாநிலத் துணைத் தலைவர் முனைவர் என். மாரிசாமி தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலரது அறிக்கை மாநிலப் பொருளாளரது தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவு அறிக்கை ஆகியவற்றின் மீது பொதுக் குழு உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்தனர். உறுப்பினர்களது கருத்துகட்கு பொதுச் செயலாளரும், மாநிலப் பொருளாளரும் பதிலளித்துப் பேசிய பின் பொதுச் செயலாளரது அறிக்கை சில சேர்க்கையுடனும் பொருளாளரது அறிக்கையும் பொதுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பின் மாநில இணைச் செயலாளர் பேரா. சிவ சண்முகம் மாநாட்டு தீர்மானங்களை படித்தார். அத்துடன் ஒரு தீர்மானம் சேர்க்கப்பட்டு பொதுக் குழுவால் ஏற்கப்பட்டது.

இதன் பின்னர் மாலை 4.00 மணிக்கு நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநில பொதுச் செயலாளர் பேரா. இ.பி. பெருமாள் தலைமை தாங்கினார். இந்நிறைவு விழாவிற்கு வந்தோரை மாநில துணைத்தலைவர் பேரா. பார்வதி கோபாலன் வரவேற்றார். நிறைவு விழாவில் கலந்து கொண்டோரைப் பற்றிய அறிமுக உரையை மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர் பேரா. சந்திரா அளித்தார். துணைத்தலைவர் முனைவர் வே. இரவி, AIFRUCTO மண்டல செயலாளர் முனைவர் வி. சுவாமிநாதன், தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மாநிலத் தலைவர் பேரா. வீரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இம்மாநாட்டை ஆயுள் காப்பீட்டு கழக தென்மண்டல ஊழியர் சங்க முன்னாள் துணைத் தலைவர் திரு புண்ணிய மூர்த்தி நிறைவுரையாற்றி சிறப்பித்தார்கள். இறுதியாக மாநிலத் துணைத் தலைவர் முனைவர் ம. இராஜகோபால் அனைவருக்கும் நன்றி கூறிய பின் தேசிய கீதத்துடன் மாநாடு நிறைவு பெற்றது.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



கடந்த கால மாநாடுகளைப் போன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. 600க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாநிலத்தின் பல்வேறு கிளைகளினின்றும் உறுப்பினர்கள் வருகை தந்து சிறப்பித்தனர். உறுப்பினர்கள் ஆர்வத்தையும் எழுச்சியையும் எடுத்துக் காட்டும் விதமாக அமைந்தது. என்றும் குறையாத வேகத்துடன் சங்கத்தின் பதாகையை உயர்த்தி பிடித்து முன்னெடுத்து செல்லும் வாழ்க ஒற்றுமை வளர்க TANRECTA

**இ.பி. பெருமாள்**
பொதுச் செயலாளர்.

---

**தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

பதிவெண்: 236/2000

**பத்தொன்பதாவது மாநில மாநாடு தீர்மானங்கள்: 28.09.2019**

**மத்திய அரசு :**

1. சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் அதிகம் வாழும் நமது நாட்டில் கல்வியின் தரத்தை உயர்த்துவது என்ற பெயரில் சாமான்யர்கள் பள்ளி மற்றும் உயர்கல்வி பெறும் உரிமையை பறிக்கும் வகையில் மேலும் கல்வியை வணிகமயமாக்கும் நோக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ள மக்கள் விரோத புதிய கல்விக் கொள்கை-வரைவு-2019 அறிக்கையின் பிற்போக்கு அம்சங்களை திரும்பப் பெற்று அனைவருக்கும் ஏற்புடைய கல்வித் திட்டத்தினை அமுல்படுத்த வேண்டுமென மத்திய அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
2. கல்வியை பொதுப்பட்டியலிலிருந்து (Concurrent List) மாநிலப்பட்டியலுக்கு (State List) மாற்றிட மத்திய அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
3. மத்திய அரசின் மொத்த வருமானத்தில் (GDP) 6 விழுக்காடு நிதியை கல்விக்கு ஒதுக்கவேண்டுமென மத்திய அரசை கேட்டுக்கொள்கிறது.
4. மருத்துவம் சார்ந்த எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு நீட் நுழைவுத் தேர்வினையும் மருத்துவ மேற்படிப்பிற்கு நெக்ஸ்ட் தேர்வினையும் ரத்து செய்து +2 தேர்வு மற்றும் எம்.பி.பி.எஸ். தேர்வுகளின் மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்த வேண்டுமென மத்திய அரசை கேட்டுக்கொள்கிறது.
5. மத்திய அரசின் 7-வது ஊதியக்குழுவின் அடிப்படையில் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான யூ.ஜி.சி. ஊதிய திருத்தத்தினை அனைத்து மாநிலங்களும் முழுமையாக அமுல் படுத்திட மத்திய அரசு மாநில அரசுகளுக்கு 100 சதவீதம் நிதி உதவி அளித்திட வேண்டப்படுகிறது.
6. ஓய்வூதியர்கள் பெறும் ஓய்வூதியம் வாழ்வூதியம் என்பதனால் மேற்படி வருமானத்திற்கு முழுமையான வரிவிலக்கு அளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறது.





6. மாநாடு தொடர்பாக தஞ்சைக் கிளையிலிருந்து அவ்வப்போது வந்த தபால் விபரங்களை உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.
7. இறுதியாக தஞ்சை மாநாட்டிற்கு கிளையில் இருந்து திரளான நபர்கள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்ளப்பட்டது.

கிளைப் பொருளாளர் பேரா. பழனி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. **அடுத்த கூட்டம் 13.10.2019 அன்று இதே அரங்கில் நடைபெறுமென உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.**

**V. பழனிச்சாமி**
கிளைச் செயலாளர், கரூர்

**கிருஷ்ணகிரி கிளை**

எங்கள் கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 14.09.2019 அன்று மாலை மணியளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்துநிலையம் அருகில் உள்ள ஆரியபவன் ஹோட்டலில் நடைபெற்றது. கிளையின் தலைவர் பேரா. B.R. வெங்கடேச குப்தா தலைமை தாங்கினார். கிளைச் செயலாளர் அனைவரையும் வரவேற்றார்.

இந்த மாதம் தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடும் பேரா. K. முனுசாமி, பேரா. பயாஸ் பாட்சா மற்றும் பேரா. முனைவர் N.C. ஞானசேகரன் அவர்களுக்கும் மற்றும் திருமணநாளைக் கொண்டாடும் பேரா. K. முனுசாமி அவர்களுக்கும் வாழ்த்துக்களை கிளைச் செயலாளர் தெரிவித்தார். அனைவரும் அவர்களை வாழ்த்தினார்கள். 28.09.2019 அன்று தஞ்சையில் நடக்கவுள்ள நம் கழக மாநில மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் யாவர் என்று கேட்கப்பட்டது. எவரும் முன்வரவில்லை.

மாநாட்டு மலருக்கு எங்கள் கிளையின் சார்பாக 1/2 பக்க விளம்பரம் - வாழ்த்துச் செய்தியாக கொடுக்க முடிவு செய்யப்பட்டது. கிளைச் செயலாளர் அன்றே மாநாட்டு பொருளாளரைத் தொடர்பு கொண்டு மாநாடு சிறப்பாக நடைபெற வாழ்த்துச் செய்தி மாநாடு மலரில் போடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கான தொகையை செயலாளர் வங்கி மூலம் அனுப்பியுள்ளார், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அடுத்த கூட்டம் அக்டோபர் திங்கள் இரண்டாம் சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.** சிற்றுண்டி மற்றும் தேநீருக்குப்பின் பேரா. வேலுச்சாமி நன்றி கூறினார். கூட்டம் நிறைவுற்றது.

**மா. அற்புதமணி**
கிளைச் செயலாளர்.கிருஷ்ணகிரி

**கன்னியாகுமரிக் கிளை**

கன்னியாகுமரிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 10.09.2019 அன்று மாலை 4.30 மணிக்கு கிளைத் தலைவர் டாக்டர்.R. இலட்சுமணசர்மா தலைமையில் நடந்தது. இறைவணக்கத்திற்குப் பின் வந்திருந்தோரை கிளைப் பொருளாளர் பேரா. ஜெயசிங் வசந்தகுமார் அவர்கள் வரவேற்றார். கிளைச் செயலாளர் சார்பாக

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



உடைய இளையோர் மூத்தோர் பேராசிரியர்களுக்கு இடையே உள்ள ஊதிய வேறுபாட்டை நீக்கவும் TANRECTA –வின் ஆட்சிக்குழு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இக்கிளை கேட்டுக் கொள்கிறது.

உறுப்பினர் பேரா. M. சந்திரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. கிளையின் **அடுத்த கூட்டம் 12.10.2019 இரண்டாம் சனிக்கிழமை அன்று பிற்பகல் 11.00 மணிக்கு விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா இராமசாமி நாடார் திருமண அரங்கில் நடைபெறும்.**
**குறிப்பு :** 12.10.2019 அன்று அடுத்த மூன்றாண்டுக்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்வு பற்றி முடிவெடுக்கப்படும்.

பேரா. **வி. ஹரிராஜன்,**
செயலர், விருதுநகர் கிளை.

### கரூர் கிளை

கரூர் கிளையின் செப்டம்பர் மாதத்திய கூட்டம் கரூர் வாணிப செட்டியார் மண்டபத்தில் காலை பத்து மணியளவில் துவங்கியது. கூட்டத்திற்கு கிளைத்தலைவர் பேரா. R. பாண்டியராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு கிளை உறுப்பினர்கள் கணிசமான அளவில் வருகை புரிந்தனர்.

இக்கூட்டம், மாநாடு நடைபெறுவதையொட்டி இருப்பதால் உறுப்பினர்களிடையே மிகுந்த உற்சாகமும் எழுச்சியும் காணப்பட்டது. அத்தோடு இந்த உற்சாகத்தோடு பல்வேறு விசயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன.

1. மாநாட்டிற்கு மிகுந்த சிரத்தை எடுத்து செய்து கொண்டிருக்கும் தஞ்சை கிளைக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கப்பட்டது.
2. மாநாட்டிற்கு பெருந்திரளான உறுப்பினர்கள் கலந்து கொள்ளவேண்டுமென ஒருமித்த குரலில் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.
3. 2006 - 2016 க்குள் ஓய்வு பெற்றவர்களுக்குரிய UGC நிலுவைத் தொகை தொடர்பான ஆணையைப் பெறுவதற்கு நம் AIFRUCTO பொறுப்பாளர்கள் சீரிய நடவடிக்கை எடுத்து வருவதை சென்ற இதழில் பார்த்தபின் ஓரளவு மனநிறைவு உறுப்பினர்களிடையே எட்டியுள்ளதை மேற்கூறிய பொறுப்பாளர்களுக்கு கரூர் கிளை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.
4. மாநாட்டிற்கு வருபவர்களுக்கு ரயிலில் முன்பதிவு செய்வதற்காக பொறுப்பான கிளை உறுப்பினர் பேரா. M. பழனிச்சாமி அவர்களை நியமனம் செய்துள்ளது. வரவிருப்பமுள்ளவர்கள் இப்பேராசிரியரை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.
5. இவ்வாண்டு கரூர் கிளையின் மூத்த உறுப்பினர் பேரா. இராஜசேகர தங்கமணி அவர்கள் 80 அகவை எட்டியுள்ளதால் அந்நாருக்கு பாராட்டு உரை வழங்கி சிறப்பிக்கப்பட்டது. மேலும் வரும் மாநாட்டில் இவரை சிறப்பிக்க வேண்டி தலைமைக் கழகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.





7. பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல்களில் மகளிருக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறது.
8. சென்னை–சேலம் எட்டு வழிச்சாலை திட்டத்தினை முழுமையாக கைவிட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.
9. நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பொருளாதார வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக குறைவடைந்துள்ளது. இதனால் ஆட்டோமொபைல் தொழில் மற்றும் அது சார்ந்த சிறுதொழில்களும் நலிவடைந்துள்ளது. தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருளாதார வீழ்ச்சியை சரி செய்ய தேவையான உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென மத்திய அரசை கேட்டுக்கொள்கிறது.

**மாநில அரசு :**

1. தமிழக அரசு 01.04.2004 முதல் துவங்கிய புதிய ஓய்வூதிய திட்டத்தினை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.
2. 2006–க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதிய திருத்தம் வழங்கியது போல 2006 முதல் 2015 முடிய பணிஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு திருத்திய ஓய்வூயம் வழங்கிட ஓய்வூதிய அட்டவணை (Concordant table) வழங்கிட தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
3. தமிழ்நாடு அரசு 8–வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தியபோது 21 மாதங்கள் கழித்து 01.10.2017 முதல் அமுல்படுத்தியது. மாறாக மேற்படி ஊதியம் மற்றும் ஓய்வூதிய திட்டத்தினை 01.01.2016 முதல் அமுல்படுத்தி 21 மாதங்களுக்கான நிலுவைத் தொகையினை வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுகிறோம்.
4. 01.01.1986 முதல் 31.12.1989 முடிய உள்ள காலத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரையில் திருத்திய ஓய்வூதியம் வழங்கப்படாமல் உள்ளது. 2006–க்கு முன்பு ஓய்வு பெற்ற அனைவரும் திருத்தப்பட்ட ஓய்வு ஊதியம் பெற்றுவிட்ட நிலையில் அவர்களுக்கு இதுவரை ஓய்வுதியதிட்டம் வழங்கிட ஆணை வழங்காததை கண்டிக்கிறோம். எனவே உதவி பேராசிரியராக 19 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தாலும் அல்லது உதவி பேராசிரியர் பணியுடன் தேர்வு விரிவுரையாளராக பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தாலும் மேற்படி 19 ஆண்டுகளை கணக்கிட்டு ஓய்வூதிய திருத்த ஆணை வழங்க கேட்டுக்கொள்கிறது.
5. பட்டதாரி பயிற்றுனர் மற்றும் விளக்குனராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு தற்போதைய யு.ஜி.சி. ஊதியத்திட்டத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை. மாநில அரசு ஊதியத் திருத்தத்திலும் கணக்கில்

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



கொள்ளப்படவில்லை. எனவே அவர்களுக்கு உரிய ஊதிய திருத்தம் நிர்ணயம் செய்து ஓய்வூதியம் வழங்கிட ஆணை வழங்கக் கேட்டுக்கொள்கிறது.

6. 2008-2009- ம் கல்வியாண்டில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அரசால் மீளப் பணியமர்த்தப்பட்டு அரசுக் கல்லூரிகளில் பணியாற்றினர். அவ்வாறு பணியாற்றியவர்களுக்கு மேற்படி பணிக்காலத்திற்கு யு.ஜி.சி. ஊதியம் நிர்ணயத்தின்படி ஓய்வூதிய திருத்தம் செய்து நிலுவை வழங்கிட ஆணை வழங்கிட கேட்டுக்கொள்கிறது.
7. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 1995-ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் 1995-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு 1996 மே 31 தேதி வரை தொடர்ந்து பணியாற்றிட தமிழக அரசு ஆணை வழங்கியது. மேற்படி காலத்தில் 01.01.1996 முதல் யு.ஜி.சி. யின் ஊதிய ஆணைகள் அமுலாக்கப்பட்டது. எனவே அவர்களுக்கு ஊதிய யு.ஜி.சி. ஊதிய விகிதத்தின்படி ஓய்வூதியதிருத்தம் மாற்றியமைக்கப்பட்டு நிலுவை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.
8. 2005 ஜுன் முதல் 2005 டிசம்பர் முடிய பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 மே 31 வரை பணிநீட்டிப்பு வழங்கப்பட்டது. மேற்படி மீளப் பணியிலிருந்தோருக்கு புதிய யு.ஜி.சி. விகிதத்தின்படி ஊதியத் திருத்தம் வழங்கி ஓய்வூதியம் வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.
9. பட்டதாரி பயிற்றுனர் மற்றும் விளக்குனராக பணியாற்றி உதவி பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றோர் பட்டதாரி பயிற்றுனர் மற்றும் விளக்குனரைவிட குறைவான ஓய்வூதியம் பெறுவதை மாற்றியமைத்து ஆணை வழங்க வேண்டப்படுகிறது.
10. 1980 ஜனவரி முதல் 1985 டிசம்பர் முடிய பணியில் சேர்ந்த அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு உயர் துவக்க ஊதியம் ரூ. 14,940/- வழங்கியதுபோல அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.
11. ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவித்து ஆணை வழங்க தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.
12. ஓய்வூதியர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதந்தோறும்ரூ.10,000/- மருத்துவப்படி உயர்த்தி வழங்க ஆணை கோரப்படுகிறது.
13. ஓய்வு பெறும்போது வழங்கப்படும் கம்யூடேசனுக்கு 15 வருடங்கள் மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படுகிறது. இவ்வாறு பிடித்தம் செய்யப்படும் தொகை வழங்கிய தொகையை விட அதிகமாக உள்ளதால் 15 ஆண்டுகளுக்குப் பதிலாக 12 ஆண்டுகள் மட்டுமே பிடித்தம் செய்ய ஆணை வழங்கிட தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.





**கூட்டத்திற்கு பின்பு கிளையின் ஆண்டு விருந்து விழுப்புரம் மஹாலக்ஷ்மி பிளாஸாவில் (Greens) உள்ள சைவ உணவகத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.**

பேரா. **இரா. இராசசேகரன்,**
தலைவர், விழுப்புரம் கிளை.

## விருதுநகர் கிளை

விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 14.09.2019 முற்பகல் 11.00 மணியளவில் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் N. இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்க வந்திருந்த அனைவரையும் தலைவர் வரவேற்று தலைமையுரையாற்றினார்.

**கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :**

1. இம்மாதம் பிறந்தநாள் காணும் நமது கிளையின் உறுப்பினர்கள் பேரா. தனபாலன் மற்றும் Dr.D.சசிரேகா அவர்களின் பெயர்களை துணைத்தலைவர் பேரா. S. கருப்பையா அவர்கள் வாசிக்க கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.
2. கிளைப்பொருளாளர் K. ராஜசேகரன் அவர்கள் இம்மாதம் கட்டிட நிதி வழங்கிய உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த தொகையையும் வாசிக்க கூட்டத்தில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கப்பட்டது. தலா ரூ. 7000/- கட்டிட நிதி வழங்கிய பேராசிரியர்கள் சென்ற மாத தொடர்ச்சி மகளிர் கல்லூரி விருதுநகர் 103, Dr. செல்வி கிரேஸ். ........ தொடரும்.
3. உறுப்பினர்கள் எல்லோருக்கும் சரஸ்வதி பூஜை, விஜயதசமி மற்றும் தீபாவளி பண்டிகை நல்வாழ்த்துக்களை இக்கிளை தெரிவித்துக் கொள்கிறது.
4. 2019 செப்டம்பர் மாத கிளை கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் மதிய விருந்தினை அளித்த முனைவர் K.M. கதிரேசன் அவர்களை நன்றியுடன் பாராட்டுகிறது.
5. 2019 அக்டோபர் மாத கிளை கூட்டத்திற்கு வரும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மதிய விருந்து வழங்க இசைந்து பேரா. K. ராம்தாஸ், பேரா. G. ராதிகா – தம்பதியர் விடுத்த அழைப்பினை இக்கிளை அன்புடன் ஏற்றுக் கொள்கிறது.
6. இந்த ஆண்டுக்குரிய உறுப்பினர் சந்தாதொகை கொடுக்காதவர் கட்டிட நிதி வழங்காதவர்களையும் விரைவில் கொடுக்கும்படி இக்கிளை அவர்களை அன்புடன் வேண்டுகிறது.
7. உதவிபெறும் கல்லூரிகளில் 1980 முதல் 1985 வரை பணியில் சேர்ந்த பேராசிரியர்களுக்கு ரூ.14,940/- என்ற சம்பள உயர்வு கிடைக்கவும் ஒரே தகுதி

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## விழுப்புரம் கிளை

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 14.9.2019 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விழுப்புரம், வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கிளைத்தலைவர் பேரா.இரா.இராசசேகரன் அவர்களது தலைமையில் நடைபெற்றது. வருகை புரிந்த உறுப்பினர்களை பேரா. ஆர்.திருமால் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். "திங்கள் ஒரு குறள்" என்ற வகையில் பேரா.முனைவர் மா.சற்குணம் அவர்கள் "வெருவந்த செய்யாமை" என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்.

**"வெருவந்த செய்தொழுகும் வெங்ககாலனாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்" (குறள் 563)**

கிளைத்தலைவர் தமது தலைமையுரையில் பேரா.நரசிங்கம் ஐயா அவர்கள் உருவாக்கிய நமது சங்கத்தை நாம் நன்முறையில் நிர்வகித்து கட்டிக்காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரது கடமை என்றும், அதனால் கிளைப் பொறுப்பாளர்கள் மிகுந்த கவனத்துடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டியது அவசியமாகிறது என்றும் குறிப்பிட்டார். கிளைச் செயலர் மற்றும் இணைச்செயலர் ஆகிய இருவரும் கூட்டத்திற்கு வராமையால் செயலர் அறிக்கையையும் கிளைத்தலைவர் அவர்களே அளித்தார். அக்டோபர் மாதப் பொதுக்குழுக் கூட்டத்தின்போது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான கிளைப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலை நடத்துவது என்றும், கிளையின் ஆண்டு விருந்தினையும் அக்டோபர் மாதக் கூட்டத்தின் போது நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. கிளைத் தேர்தலை நடத்துவதற்கு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் குழு நியமிக்கப்பட்டது. அதன்படி பேரா. முனைவர் ந. கன்னையா அவர்கள் தேர்தல் குழு ஒருங்கிணைப்பாளராகவும் பேரா.எஸ்.விஸ்வநாதன் மற்றும் பேரா.முனைவர் மா.சற்குணம் ஆகியோர் தேர்தல்குழு உறுப்பினர்களாகவும் செயல்படுவதற்கு இசைவு தெரிவித்தனர்.

இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா.முனைவர் எஸ்.கோவிந்தராசலு, பேரா. முனைவர் பொன். நடராசன், பேரா.ஏ.மோகன்ராஜ் மற்றும் பேரா. எஸ்.சந்திரசேகரன் ஆகியோர்க்கும், இம்மாதம் மணநாள் காணும் பேரா.முனைவர் மா. சற்குணம், பேரா.சொ. பிரகாசம், பேரா. த.மதிவாணன், பேரா.முனைவர் பொன். நடராசன், பேரா.ஆர்.நடராசன் (வரலாறு), பேரா.வ.இராசு மற்றும் பேரா.கே.ஆர்.லோகியா ஆகியோர்க்கும் வருகைபுரிந்த உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். பேரா.முனைவர் ந.கன்னையா அவர்களது நன்றியுரைக்குப்பின் கூட்டம் நிறைவடைந்தது.

**அடுத்த மாதக் கூட்டம் 12.10.2019 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும் என்றும்,**





14. கல்லூரி பணியில் இளையோர் பணியில் மூத்தவரைக் காட்டிலும் கூடுதல் ஊதியம் பெற்றுவந்தால் இளையோரின் ஊதியத்திற்கு இணையாக ஊதியம் வழங்கிட வேண்டும் என கூறப்பட்ட நிலையில் செப்டம்பர் 2015 முதல் அவ்வாணை நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது தெளிவான ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 27.07.1998-க்கு முன்பு முதுநிலை விரிவுரையாளராக பணி நிறைவடைந்த அனைவருக்கும் பணியில் சேர்ந்த அனைவருக்கும் மொத்தப் பணிக்காலத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு பணிமேம்பாடு வழங்கலாம் என கூறப்பட்டுள்ளது. இந்த வழிக்காட்டுதலின்படி பணிமேம்பாடு பயன் அடையாதவர்களுக்கும் பணிப்பயன் மற்றும் பணப்பலன் வழங்க ஆணையிடக் கேட்டுக்கொள்கிறது.
15. 1986-க்கு முன் ஓய்வு பெற்றவருக்கு அரசாணை 106-ன்படி ஓய்வூதிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மற்ற அனைத்து பிரிவினருக்கும் ஓய்வூதிய திருத்தம் செய்து 01.01.2007 முதல் நிலுவை வழங்கியது போன்று அவர்களுக்கும் வழங்காமல் 15.04.2016 முதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே மற்ற எல்லோருக்கும் வழங்கியது போன்று 01.01.2007 முதல் நிலுவை வழங்கிட வேண்டப்படுகிறது.
16. அரசுக் கல்லூரியில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பி மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கித் தற்போது கௌரவ விரிவுரையாளராகப் பணியாற்றும் அனைவரையும் நிரந்தரமாக்கிட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. அதே போன்று கணினி கற்பிக்கும் மையத்தில் (C.L.P.) தற்காலிகமாகப் பணியாற்றி வரும் ஆசிரியர்களையும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
17. 01.01.2016-க்கு முன்பு பணி ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர்கள் 19 ஆண்டுகள் பணிமுடித்து மேலும் 3 ஆண்டுகள் இணை பேராசிரியராக பணிமுடித்த நிலையில் அவர்களது மொத்த பணிக்காலமாக 22 ஆண்டுகளை கணக்கில் எடுத்து மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை பல்கலைக்கழக மான்ய குழுவிற்கு பரிந்துரைத்த AGP 10000/-, Academic level 14-ன்படி பேராசிரியர்களுக்கான (Professor) ஊதியம் ரூ.1,44,200/- ஐ நிர்ணயம் செய்து அதன் பாதியளவு ரூ.72,100/-ஐ ஓய்வூதியமாக வழங்க ஆணை வழங்க வேண்டுமென தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.
18. இந்திய அரசு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர்களின் நலத்துறை எண் 38/3708-P&PW(A) நாள்: 06.04.2014-ன்படி 01.01.2006-க்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பணிக்காலம் 33 ஆண்டுகளுக்கு எவ்வளவு காலம் குறைவாக இருப்பினும் முழு ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும், பணிக்கால வருட விகிதாச்சாரப்படி ஓய்வூதியம் குறைக்கக்கூடாது எனவும்

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



01.01.2006 முதல் பணப்பயன் பெறவும் தகுதிபெற்றவர் என ஆணையிடப்பட்டுள்ளது. இதேபோல தமிழக அரசு ஓய்வூதியர்களுக்கு பயன்படும் வகையில் உரிய ஆணை பிறப்பிக்க இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

19. மத்திய 6-வது ஊதியக்குழு பரிந்துரையின்படி மனிதவள மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள ஆணையின்படி U.G, P.G. கல்லூரி முதல்வர்கள் என்ற வேறுபாடு இன்றி PAY BAND 37,400 - 67,000 - AGP - 10000 பெறுவதற்கு மாறாக மத்திய 7-வது ஊதியக்குழு பரிந்துரைக்கு வெளியிடப்பட்டுள்ள ஆணைப்படி குழு கல்லூரி முதல்வர்களை இணை பேராசிரியர் (Associate Professor) ஆக கருதி AGP 9000க்குரிய அகடமிக் லெவல் 13A-ன்படி ரூ.1,31,400/- என நிர்ணயம் செய்யும் முரண்பாட்டை நீக்கி PG கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கும் அகடமிக் லெவல் 14-ன்படி ஊதியம் நிர்ணயம் செய்து ஊதியத்தில் பாதியளவான ரூ. 72,100/-ஐ ஓய்வூதியமாக வழங்கிட ஆணை பிறப்பிக்க வேண்டப்படுகிறது.

**பொதுக்கோரிக்கை:**

1. கடந்த ஆண்டு பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்த ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களை பழிவாங்கும் நோக்கத்தோடு 17-b விளக்க ஆணை வழங்குதல், பணிமாறுதல், பணிமேம்பாடு நிறுத்தி வைத்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை மத்திய அரசின்அறிவுறுத்தலுக்கு ஏற்ப கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கருத்துக் கேட்காமல் உடனடியாக 5-ம் வகுப்பு மற்றும் 8-ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பொதுத் தேர்வு அறிவித்ததை வன்மையாக கண்டிக்கிறோம். மேற்படி பொதுத் தேர்வுகள் பள்ளி இடை நிற்றலையும், ஏழை எளிய மாணவர்கள் கல்விபெறும் உரிமையை இழக்கும் சூழலையும் ஏற்படுத்தும் என்பதால் அவ்வாணையை உடனடியாக திரும்பப்பெற வேண்டுமெனவும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

3. நமது நாட்டின் விண்வெளியியல் துறை(ISRO)விஞ்ஞானிகள் சந்திரனின் தென்துருவத்தை ஆய்வுசெய்யும் பொருட்டு சந்திரயான் 2 விண்கலத்தை விண்ணில் ஏவியதன் மூலம் உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளனர். விண்வெளி தொழில்நுட்பத்தில் உலக நாடுகளில் 4-வது இடத்தைப் பெற்று பெருமைப்படுத்தி உள்ளனர். மேற்படி பணியில் ஈடுபட்ட ISRO தலைவர் சிவன் உள்ளிட்ட அனைத்து விஞ்ஞானிகளையும் இம்மாநாடு பாராட்டுகிறது.





**3. அக்டோபர் மாத சங்க கூட்டம் 12.10.2019 அன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.**

சங்கத்தின் முன்னாள் செயலர் முனைவர். ஜே.பி. ஜெயக்குமார் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது

பேரா. **சு. சுகுமார்,**
செயலர், பொறையார் கிளை.

**திருநெல்வேலி கிளை**

இக்கிளையின் மாதாந்திரக் கூட்டம் 12.9.2019 அன்று மாலை 6 மணிக்கு பேரா. M. கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை பேரா. S. காந்திமதி வரவேற்றார்.

பொதுச்செயலரின் சுற்றறிக்கை எண் 8/2019 உறுப்பினர்களின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் 28.9.2019 அன்று தஞ்சையில் நடைபெறும் 19-வது மாநில மாநாட்டில் உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோளும் விடுக்கப்பட்டு, கலந்துகொள்பவர்களின் போக்குவரத்து செலவினை கிளை ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது. இக்கிளையின் புதிய உறுப்பினராக பேரா. Dr.P. கண்ணன் (Dept.of. Economics, Ambai Arts College, Ambasamudram) அவர்கள் இணைந்துள்ளார்கள். உறுப்பினர்கள் கரஒலி எழுப்பி அவரை வரவேற்றனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பேரா. S. சூரியநாராயணன், அமர் சேவா சங்கத்தின் (ஆய்குடி) பணிகளையும், அவை எவ்வாறு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி செய்கின்றன என்பதனையும் விளக்கமாக கூறினார்கள். மின்தடை ஏற்பட்ட போதிலும் கூட்டம் அமைதியாக நடைபெற்றது.

இம்மாதம் (அக்டோபர், 2019) பிறந்தநாள் கொண்டாடும் பேராசிரியர்கள் S. தோத்தாத்ரி, நிகமத்துல்லா, R. செல்வரத்தினம் பென்னான்டோ, R. ஸ்டீபன் ரோட்ரிக்ஸ், Dr.P. கண்ணன் ஆகியோர் நோயற்ற வாழ்வுடனும், புகழுடனும், மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது. கிளையின் சார்பில் அனைவருக்கும் இன்சுவை விருந்து அளிக்கப்பட்டது. பேரா. I.S. காந்திமதி நாதன் நன்றிகூற கூட்டம் இனிது நிறைவுற்றது.

**அக்டோபர் 2019-ஆம் மாதக் கூட்டம் 10.10.2019 அன்று (இரண்டாம் வியாழன்) மாலை 6 மணிக்கு வழக்கம் போல் ஜங்ஷன் MDT இந்துக் கல்லூரி மேனிலைப்பள்ளியில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

பேரா. **தி. பார்வதிநாதன்,**
செயலர், திருநெல்வேலி கிளை.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



28.09.2019 அன்று தஞ்சையில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் வேலூர் கிளையிலிருந்து பத்து உறுப்பினர்கள் கலந்துகொள்ள உள்ளனர். கிளையின் இப்போதைய உறுப்பினர்கள் 66பேர் ஆகும். அப்பட்டியல் மாநாட்டு மலர்க்குழு அமைப்பாளர்க்கு அனுப்பப்பட்ட பின்பு பேரா. V.M. அப்துல்லா என்ற உறுப்பினர்க்காக 2019-20க்கு மட்டும் உறுப்பினர் கட்டணம் வந்துள்ளது. அதற்கு முன்னதாக அவர் 2017-18 மற்றும் 2018-19 ஆகிய ஆண்டுகளுக்கு உறுப்பினர் கட்டணங்கள் செலுத்தப்படவில்லை. மேலும் Dr.G.W.C. மனோகரனும் 2019-2020-க்கான உறுப்பினர் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்.

மாநாட்டு மலரில் வேலூர் கிளை உறுப்பினர்கள் வாழ்த்துமடல் கறுப்பு - வெள்ளை - ஒருபக்க அளவில் விளம்பரக் கட்டணமாக ரூ.3000/- NEFT Transfer மூலம் மாநாட்டுப் பொருளாளர் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. எண்பது வயதைப் பூர்த்திசெய்துள்ள உறுப்பினர் Dr.K. மோகன் மாநாட்டில் நேரே வந்து கலந்துகொள்ள உள்ளார். பேரா.நரசிங்கம் அறக்கட்டளை நிதி வேண்டி, யாரும் விண்ணப்பிக்கவில்லை.

கிளை உறுப்பினர்கள் பலர் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றிப் பேசினர். கல்லூரிகளில், வேலூர் கிளை மூலம் மரங்கள் நடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர் பேரா. P.C. இரத்தினம் இதுவரை 25 நூல்களைப் படைத்துள்ளார்கள். அவற்றை அனைத்து உறுப்பினர்களுக்கும் வெளியிடப்பட்டவுடன் இனாமாக வழங்கி வருகிறார்கள். அன்னார்க்குக் கிளை மேன்மேலும் நூல்கள் படைத்திட வாழ்த்துக்கள்.

பிறந்தநாள் கண்ட கிளைத் தலைவர் பேரா. ஜான் ஞானக்கண் அனைவர்க்கும் விருந்தளித்தார்கள். வழக்கம்போல் பேரா. R. ஆனந்தன் வாழைப்பழத்துடன் அத்திப்பழங்களையும் வழங்கினார்கள். பொருளாளர் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. **அடுத்த மாதக்கூட்டம் 08.10.19 அன்று நடைபெறும்.**

முனைவர் **மு. குருசாமி,**
செயலர், வேலூர் கிளை. செல் : 98651 45459

**பொறையார் கிளை**

ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் பொறையார் கிளையின் மாதாந்திர கூட்டம் 10.9.2019 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, தணிக்கை வட்ட ஓய்வூதியர் சங்க அலுவலகத்தில் பேரா.அ.அருள்மரியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :**

1. வருகின்ற 28.9.2019 அன்று தஞ்சையில் நடைபெற உள்ள TANRECTA வின் மாநில மாநாட்டிற்கு சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.
2. மாநாட்டிற்கு சென்றுவர ஏற்படுத்தப்பட்ட அனைத்து ஏற்பாடுகளும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.





4. தமிழக விவசாயிகளுக்கு இதுவரையில் வழங்கி வந்த 4% குறைந்த வட்டியில் நகைக் கடன்கள் வழங்குவதை வங்கிகள் நிறுத்தியுள்ளதாக அறிகிறோம். இச்செயலை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. அனைத்து வங்கிகளும் தொடர்ந்து மேற்படி நகைக் கடன்களை குறைந்த வட்டியில் வழங்கி தமிழக விவசாயிகளுக்கு உதவிடவேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.
5. சென்னை பள்ளிக்கரணையில் தகவல் தொழில்நுட்ப ஊழியரான செல்வி சுபஸ்ரீ ஸ்கூட்டரில் வீடு திரும்பிய போது பேனர் காற்றில் சரிந்து விழுந்தபோது அவர் உயிரிழக்க நேர்ந்தது பெரும் துயரச் சம்பவமாகும். அத்துயரத்தில் TANRECTA-ம் பங்குகொள்கிறது. இந்தப் பிரச்சனையில் நீதிமன்றம் தலையிட்டது மிகவும் வரவேற்கத்தக்கது. தமிழக அரசு உடனடியாக சுபஸ்ரீ குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கவேண்டுமெனவும், சாலைகளில் பேனர் வைக்கும் நடைமுறையை முற்றிலும் தடை செய்யவேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
6. 2003- மார்ச் மாதத்திற்கு பின் ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர்கள் TANRECTA-வின் உறுப்பினராக சேர்ந்துகொள்ள அனுமதிப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

**தலைவர் பொதுச்செயலாளர்**

## கிளைச் செய்திகள்

### பொள்ளாச்சி கிளை

எமது கிளையின் மாதாந்திர கூட்டம் 14.9.2019 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு N.G.M. கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

வருகைபுரிந்த உறுப்பினர்களை வரவேற்று, காலம் சென்ற பேராசிரியர் தேவராஜ் அவர்களுக்கும், பேராசிரியர் துரைராஜ் அவர்களின் தாயார் அவர்களுக்கும் அந்நாரது ஆத்மா சாந்தியடைய ஒரு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி, கூட்ட நிகழ்ச்சிகளை கிளைச் செயலாளர் துவக்கி வைத்தார்.

மறைந்த பேராசிரியர் தேவராஜ் அவர்களுக்கு, பேராசிரியர்கள் M. கோபால்சாமி மற்றும் பேரா. பாலகங்காதரன் அவர்களும் புகழஞ்சலி செலுத்தினார்கள். கிளையின் தலைவர் முனைவர் P. சுந்தரம் அவர்கள் கிளையின் செயல்பாடுகளையும், மாநில மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாகவும் விளக்கிக் கூறினார்கள்.

இம்மாதம் பிறந்தநாள் காணும் முன்னாள் முதல்வர் பேரா. பிரசாத் குமார் மற்றும் பேரா. A.N. தாமோதரன் ஆகியோர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் கிளையின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது. பேரா. K. விஸ்வநாதன் அவர்கள், தமது பேரன் பிறந்ததைக் கொண்டாடும் விதமாக கிளையின் உறுப்பினர்களுக்கு, இனிப்பு, காரம் வழங்கி சிறப்பித்தார். கிளையின் சார்பாக அன்னாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



பொள்ளாச்சி கிளையின் உறுப்பினர்களுக்கு, ஒவ்வொரு உறுப்பினர்களின் விவரங்களை தொகுத்து நூல் வடிவில் அளித்தமைக்கு கிளையின் பொறுப்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. நூல் பெறாதவர்கள் கிளைச்செயலர் மற்றும் பொருளாளரை தொடர்பு கொண்டு நூல் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

இறுதியில் பேரா. நஞ்சையன் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. **அடுத்த கூட்டம் 12.10.2019 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பேரா. N.G.M கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

முனைவர் **மு. இராமச்சந்திரன்,**
செயலர், பொள்ளாச்சி கிளை.

## தஞ்சாவூர் கிளை

எமது கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 14.09.2019 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தஞ்சை மன்னர் சரபோசி அரசுக் கல்லூரியில் கேப்டன் முருகையன் அரங்கத்தில் நடைபெற்றது. கிளைத் தலைவர் பேரா. P. குமாரவேலு அவர்கள் தலைமை வகித்தார்கள். மாநிலத் தலைவர் பேரா. டி. என். கோகுல்நாத் பாபு அவர்களும் மாநிலப் பொதுச் செயலாளர் இ.பி. பெருமாள் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கிளைப் பொருளாளர் பேரா. ஆ. இராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். இம்மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் பி. சோமசுந்தரம், ஜி. கல்யாணசுந்தரம், அ. வெங்கடேஸ்வரன், முகம்மது உமர், எஸ். சண்முகநாதன், டி. ஜெய சோழன், எஸ். குலோத்துங்கன், அ. பன்னீர் செல்வம் மற்றும் ஜஃபர் ஹுசைன் ஆகியோருக்கு கிளையின் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த, பிறந்தநாள்காணும் பேரா.அ. வெங்கடேஸ்வரன் அவர்களுக்கு மாநிலத் தலைவரும், முனைவர். அ. பன்னீர் செல்வம் அவர்களுக்கு மாநிலப் பொதுச் செயலாளர் அவர்களும் கைத்தறியாடை அணிவித்து சிறப்பு செய்தனர்.

19– வது மாநில மாநாடு பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்கள் திரளாகப் பங்கேற்றனர். வந்திருந்த அனைவருக்கும் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் அ, வெங்கடேஸ்வரன் அவர்களும் முனைவர்.அ. பன்னீர் செல்வம் அவர்களும் இனிப்பு, காரம் தேநீர் வழங்கி மகிழ்ந்தனர். அவர்களுக்கு கிளையின் சார்பாக நன்றி கூறப்பட்டது. இறுதியில் இணைச் செயலாளர் பேரா. கு. ஏகநரேந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

**கிளையின் அடுத்த பொதுக்குழுக் கூட்டம் 12.10.2019 சனிக்கிழமை மன்னர் சரபோசி அரசு கலைக் கல்லூரியில் நடைபெறும் எனத் தெரிவிக்கலாகிறது.**

பேரா. **வே. இராமசாமி**
செயலாளர், தஞ்சாவூர் கிளை





அவர் குடும்பத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தைக் கடலூர் கிளையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாருடைய முழு உடல் தானம் செய்து, புதுவையைச் சேர்ந்த மகாத்மா காந்தி மருத்துமனைக்கு ஒப்படைக்கப்பட்டது சிறப்பு செய்தியாகும்.

பேரா. **இரா. தாமோதரன்,**
செயலர், கடலூர் கிளை.

## திருவண்ணாமலை கிளை

எமது கிளையின் பொதுக்குழுவானது 14.9.2019 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. கிளைத்தலைவர் பேரா.சு. பரந்தாமன் தலைமையேற்று உறுப்பினர்களை வரவேற்றார்.

**பிறந்தநாள் வாழ்த்துக்கள் :** செப்டம்பர் திங்களில் பிறந்தநாள் கண்ட பேராசிரியர்கள் சு.பரந்தாமன் (வேதியியல் துறை 8903304404) மற்றும் ஞா.சுந்தர் ராயப்பன் (கணிதம் 9443335653) ஆகியோர் நலமும் வளமும் பெற்று நல்வாழ்த்துக்கள் கூறப்பட்டன.

**பாராட்டு :** விண்வெளி ஆய்வில் இந்தியாவின் பெருமையை உலகறியச்செய்த "ISRO" ன் தலைவர் சிவன் மற்றும் அவருக்கு அனைத்து வகையிலும் உறுதுணையாய் இருந்து செயல்பட அனைத்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பாராட்டி மகிழ்ந்தனர். வேலூர் கிளையைச் சார்ந்த Dr.K. அமோகன் அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் பெருமைமிகு 'SIR' பட்டம் பெற்றமைக்கு அவருக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மைய, மாநில பொறுப்பாளர்களின் சங்கப் பணிகளை உறுப்பினர்களுடன் செயலர் பகிர்ந்து கொண்டார். உறுப்பினர்கள் எழுப்பிய ஐயப்பாடுகளுக்கு செயலர் பதிலுரைத்தார். மாநில மாநாட்டிற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் வர வேண்டும் எனக் கூறப்பட்டது. கிளைப்பொருளர் பேராசிரியர் என்.சி. கணேசன் அவர்கள் நன்றி கூற பொதுக்குழு இனிதே நிறைவுற்றது.

பேரா. **கு. மகாலிங்கம்,**
செயலர், திருவண்ணாமலை கிளை.

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் செப்டம்பர் மாதக் கிளைக் கூட்டம் 10.9.2019 அன்று மாலை 5.00 மணிக்கு கிளைத் தலைவர் பேரா. D. ஜான் ஞானக்கண் தலைமையில் வேலூர் ஆசிரியர் இல்லத்தில் நடைபெற்றது. கிளைச் செயலர் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக பேரா. D. ஜான் ஞானக்கண் (28.9.1952) மற்றும் பேரா. சசிகலா அமர சூரியா (27.09.1955) ஆகிய இருவர்க்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்ளப்பட்டன.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



சுட்டிக்காட்டி, விளம்பரம் வழங்கிய உறுப்பினர்களுக்கும், நிறுவனங்களுக்கும் கிளையின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார். மேலும் ரூ.14,940/- பெற்ற பேராசிரியர்களுக்கு A.G அலுவலக செயல்பாடுகளால் ஓய்வூதியத்தில் திருத்தம் பெறுவதற்குரிய பிரச்சினைகளையும், 17.9.2019 அன்று நடைபெறவுள்ள TANRECTA மாநில செயற்குழு கூட்டப்பொருள், வரவுள்ள கிளை மற்றும் மாநிலத் தேர்தல்கள், கிளையில் 80 அகவை முடிந்த பேராசிரியர்களின் விபரம், பேரா.நரசிங்கம் அறக்கட்டளை சார்பாக நிதி வழங்கும் நிகழ்வுகள் முதலான செய்திகளை விளக்கிப் பேசினார். கிளை இணைச்செயலர் ரூ.14940/- பெற்ற உறுப்பினர்களுக்குரிய பிரச்சினைகள், அதற்குரிய தீர்வுகளை பற்றி கூறி எடுத்து வரும் பன்முக முயற்சிகளை சுட்டிக்காட்டிப் பேசினார்.

கிளைப் பொருளர் பேரா. S. இராமச்சந்திரன், கிளையின் சார்பாக இன்றைய தேதியில் நிதி செலுத்தியவர்கள் 224 உறுப்பினர்கள் என்பதை சுட்டிக்காட்டியதோடு, மாநாட்டுக்கு சென்றுவர வாகன ஏற்பாடு செய்யப்படும் என்பதைக் கூறி மாநாட்டிற்கு பெரும்பான்மையோர் பங்கு பெற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததோடு, வருகைதரவுள்ள உறுப்பினர்களின் பெயர் பட்டியலையும் கூறினார்.

இறுதியாக துணைத்தலைவர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது. **அடுத்தக்கூட்டம் இரண்டாவது செவ்வாய் கிழமை 08.10.2019 அன்று ஆயுதபூஜை என்பதால் அதற்குப் பதிலாக வருகிற 15.10.2019 (மூன்றாவது செவ்வாய்கிழமை) மாலை 4.00 மணிக்கு சேலம்-7 அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

**குறிப்பு :** 80 அகவை நிரம்பிய சேலம் கிளை உறுப்பினர்கள் பேரா. ஜெயகோபால், சேலம்-7, அரசு கலைக்கல்லூரி தாவரவியல் மேனாள் பேராசிரியர், இதே கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைப் பேரா.முனைவர் K. ரங்கராஜன் மற்றும் இயற்பியல் துறை பேரா.ஈஸ்வரன் ஆகியோருக்கு மாநாட்டு மேடையில் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

**இரங்கல் செய்தி :** சேலம் கிளையின் உறுப்பினர் பேரா. R. இராதா (மேனாள் தமிழ்த்துறைத்தலைவர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, சேலம்-8) அவர்கள் கடந்த 21.9.2019 அன்று, உடல்நலக்குறைவால் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரா.முனைவர் **பெ. மாது,**
செயலர், சேலம் கிளை.

## கடலூர் கிளை

**இரங்கல் செய்தி :** கடலூர் பெரியார் அரசு கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற, கணிதத்துறைப் பேராசிரியர் Dr.V. சுப்ரமணியம் அவர்கள் சென்ற மாதம் 14.08.19 அன்று காலமானார்.





## தூத்துக்குடி கிளை

எமது கிளையின் ஆகஸ்ட் மாதக் கூட்டம் 10.09.2019 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு துணைத் தலைவர் பேரா P. அலெக்ஸ்சாண்டர் கனகராஜ் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்று பேசினார். மேலும் அவர் 28.09.2019 அன்று தஞ்சாவூரில் நடைபெறும் 19 வது மாநில மாநாட்டில் உறுப்பினர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

செயலர் ம.கமல்ராஜ் 17.9.2019 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு, தூத்துக்குடி கருவூலத்தில் எந்த பேராசிரியருக்கும் திருத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்தார். மாநில செயலர் பேரா இ.பி.பெருமாள் அவர்கள் உடனே தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

இம்மாதம் பிறந்தநாள் காணும் எமது உறுப்பினர் முனைவர் திருமதி J.வயலட் டெல்பின் ஜெயகுமாரி அவர்களுக்கு அனைவரும் பிறந்தநாள் வாழ்த்தினை தெரிவித்தனர். அவர் அனைவருக்கும் சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்கி தம் மகிழ்வினை பகிர்ந்து கொண்டார்.

80 வயது நிரம்பிய கீழ்க்கண்ட மூன்று பேராசிரியர்கள் இல்லங்களுக்கு சில உறுப்பினர்களுடன் இணைச்செயலர் பேரா. M.J. இன்பநாயகம் சென்று அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

1. பேரா. T.R. இராஜேந்திரன், 2. பேரா. K. கடற்கரை தங்கம், 3. பேரா. S.A.S செல்வராஜ் எமது உறுப்பினர் பேரா.S.S. கந்தசாமி அவர்கள் உடல்நல குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டதை பற்றி பொது கூழு உறுப்பினர் பேரா. S. இம்மானுவல் பேசினார். இணைச்செயலர் பேரா. M.J.இன்பநாயகம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**கிளையின் அக்டோபர் மாதக் கூட்டம் 08.10.2019 இரண்டாம் செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.**

2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் முறையே ரூ.400-(நானூறு) செலுத்தாதவர்கள் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Account No: 505561496; Indian Bank, Melur Branch, Tuticorin
IFSC Code: IDIB000M083 A/C Name. Tamilnadu Retired College Teacher's Association, Thuthukudi.

பேரா.**ம. கமல்ராஜ்**
செயலர், தூத்துக்குடி கிளை.
Cell : 9442306905

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## KUMBAKONAM UNIT

The Kumbakonam Unit of Tanrecta met in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening on 14th September, 2019, President Prof. C.Rajasekaran chaired We congratulate the following members whocelebrate their birthday in the month of September. Prof. G. Rengarajulu, Prof. Dr. S.Solaiyappan, Prof. P.Marimuthu, Prof. R. Murthy, and Prof. Dr. V. Srinivasan. 19t h State Level conference of TANRECTA is to be held on 28th September, 2019, at Cauvery Kalyana Mandapam, Nanjikottai Road, Thanjavur. Information to members for their stay at Thanjavur sent by Dr.V.Ramasamy, sent on 23rd August is in our unit. We feel to write that Prof. M.Ramalingam, [retired Professor of History, from Government College for men (Autonomous), Kumbakonam] died on 29 - 08 - 2019 at Thirukutralam. On 30 - 08 - 2019 President Prof. C.Rajasekaran, Vice President Dr.C.Mani, Secretary Dr.D.Sukumar, Joint Secretary Prof. P.Marimuthu, Prof. C.J. Philomenraj, Prof. Dr.K.Anbalagan ( Indian Culture ), and Prof. Dr.J.R.Rajan paid their last respect to the mortal remains of Prof. M.Ramalingam. We condoled the demise of Prof. M.Ramalingam, observing a two minute silence for the departed soul rest in peace. We request all our members to attend the conference to make it a success. Please note that this unit Kumbakonam, has, as such, contributed Rs.11,500/- ( Rupees Eleven Thousand and Five Hundred only ) towards the expenditure for Tea during 19th Annual Conference, 2019, assisting the Thanjavur unit of tanrecta. We once again remind our unit members to remit the subscription for the year 2019 - 2020. The subscription may be sent to the unit through NEFT. For NEFT it may be addressed to NAME: TAMILNADU RETIRED COLLEGE TEACHERS' ASSOCIA-TION - KUMBAKONAM BRANCH, Bank : CITY UNION BANK, KUMBAKONAM TOWN BRANCH, 35/14, KAMATCHI JOSIER STREET, KUMBAKONAM, Account No.003 001 000 385 359 IFSCode:CIUB0000003 MICR Code: 612 054 003 Type of Account: Savings Account. **Next October, 2019, monthly meeting will be held on 12th October, 2019, the second Saturday,in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening.**

Dr.**D.Sukumar,**
Secretary, Kumbakonam Unit

## PARAMATHI VELUR UNIT

The General Body meeting was held on 14.9.2019 at Hotel South Indian Residency at 6.30 PM under the chairman ship of Dr. R. Subramaniam, the





4. அனைத்து உறுப்பினர்களுக்கும், I.D. Card வழங்குவதென, முடிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு நிழற்படம் எடுத்து TI.D. Card வழங்கப்பட்டு விட்டது. இதுவரை, அடையாள அட்டை பெறாதவர்கள், தங்களது புகைப்படத்துடன், அடுத்த கூட்டத்திற்கு வரும் போது, அதற்கான ஏற்பாடு செய்ய, முடிவு மேற்கொள்ளப்பட்டது.

**நிதிப் பரிவர்த்தனை மேற்கொள்ள விவரம் :**

வங்கி : Indian Overseas Bank, Madurai main, S.B. A/c No. 004901000034557, IFSC - IOBA0000049. பெயர் : Tamilnadu Retired College Teachers Association

வங்கிப் பண பரிமாற்றம் செய்பவர்கள், உடனடியாக பொருளாளருக்கு sms அனுப்பவும்.

உறுப்பினர் கட்டண விவரம்: TANRECTA ஆண்டுசந்தா ரூ.500/- TANRECTA Speaks ரூ. 200/-, AIFRUCTO ஆயுள்சந்தா ரூ.1000/- TANRECTA வளர்ச்சி நிதி ரூ.500/-, பேரா.நரசிங்கம் அறக்கட்டளை ரூ.500/- ஆக மொத்தம் ரூ.2700/- ஆண்டுக்கு. அடுத்த ஆண்டு புதுப்பித்தல் கட்டணம் ரூ.500/- மட்டும்.

**அடுத்த மாதக்கூட்டம் 15.10.2019 செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு பேரா. V. சண்முகம் சுந்தரம் அரங்கு, மூட்டா அலுவலகம் உறுப்பினர்கள் தவறாது வருகைபுரிய வேண்டுகிறோம்.**

பேரா. **G. இராமமூர்த்தி,**
செயலர், மதுரை கிளை.

## சேலம் கிளை

சேலம் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 10.09.2019 செவ்வாய்கிழமை, சேலம்-7, அரசு கலைக்கல்லூரி அறை எண்.6-ல் மாலை 4.00 மணியளவில் கிளையின் தலைவர் பேரா.முனைவர் கொ.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் வரவேற்புரைக்குப் பின்னர் கிளைச்செயலர் பேரா.முனைவர் பெ. மாது கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**இரங்கல் தீர்மானம் :** சேலம் கிளையின் உறுப்பினர்கள் பேரா. T.V. பாலச்சந்திரன், அரசு கலைக்கல்லூரி, சேலம்-7 மேனாள் பொருளியல்துறை பேராசிரியர், பேராசிரியை திருமதி A.G. சுப்புலட்சுமி, சேலம் சாரதா மகளிர் கல்லூரி மேனாள் பேராசிரியை, ஆகியோர் மறைவுச் செய்தியை அறிந்து சேலம் கிளை வேதனையடைவதோடு அன்னார்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறது.

தலைவர் தனது உரையில் வருகிற 28ந் தேதி தஞ்சையில் நடைபெறவுள்ள 19-ஆவது மாநாட்டுத் தொடர்பான செய்திகளையும், 7th Pay Revision செய்திகளையும், சுட்டிக்காட்டி விளக்கிப் பேசினார்.

செயலர் தனது உரையில், சேலம் கிளையின் சார்பாக TANRECTA 19-ஆவது மாநாட்டு மலருக்கு ரூ.49,500/-க்கு விளம்பரம் சேகரித்து வழங்கியதை

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



செயலாளர் தெரிவித்தார். அதுபோல், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில், நிலுவையிலுள்ள ஓய்வூதிய திருத்தத்திற்கான பணி மேற்கொள்ளப்பட்டது பற்றியும் செயலாளர் எடுத்துரைத்தார்.

மாநில முன்னாள் பொருளாளர் செல்லையா கூறிய பள்ளத்தூர் கல்லூரி முன்னாள் பேராசிரியை இந்துமதிக்கு, விரைந்து ஓய்வூதியம் நிர்ணயம் செய்யத்தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டது பற்றியும் தெரிவிக்கபட்டது. 2018 – 19 உறுப்பினர் பட்டியலை, இறுதி செய்து, ஒரு வாரத்தில், தலைமைக்கு அனுப்ப இருப்பதாக, பொருளாளர் கூட்டத்தில் தெரிவித்தார். சென்ற மாத வரவு–செலவு கணக்கை பொருளாளர், A. மனோகரன் அவையில் சமர்ப்பித்தார். தலைவர் பேரா. மதுரம், கடந்த 05-09-2019 அன்று மதுரை மீனாக்ஷி அரசினர் மகளிர் கல்லூரியில், ஓய்வுபெற்ற ஆசிரியர்களை அழைத்து, விழா எடுத்து, மகிழ்ந்தது பற்றி கூட்டத்தில் தெரிவித்தார். வெளிநாடு சுற்றுலா, உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்ததால், அத்திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. TANRECTA செய்திகளை, மாநில தலைவர் பேரா. T.N. கோகுல்நாத் பாபு விளக்கிக் கூறினார். AIFRUCTO செயற்குழு ஹைதராபாத்தில் சிறப்பாக நடந்தேறியது பற்றியும், Concordance Table விரைவில், அரசிடமிருந்து நமக்கு கிடைக்கும் என்பது பற்றியும், AIFRUCTO பொதுச் செயலாளர் முனைவர் பா. பார்த்தசாரதி தெரிவித்தார். சித்த மருத்துவர் S. ஜரினா, “சித்த மருத்துவத்தின் மகத்துவம்” – என்பது பற்றி, சிறப்புரை ஆற்றினார்.

முனைவர். S. சேது ராக்காயி, பேரா.T.R. குணவதி இல்லங்களில் நடைபெறும் திருமணங்களுக்கு, முதல் நாளே, வரவேற்பு நிகழ்ச்சியில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. பொருளாளர் A. மனோகரன் நன்றி கூறினார்.

**மாநாட்டுத் தீர்மானங்கள் :**

1. 1980–85–ஆம் ஆண்டுகளில், பணியமர்த்தப்பட்ட அரசு உதவிபெறும் மற்றும் அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு உடனடியாக ரூ.14,940/– சம்பள அலகை அமல்படுத்த, தக்க சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க, தலைமையை, இக்கிளை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.
2. தற்போது பயன்பாட்டில் உள்ள TANRECTA- Madurai Unit- Whatsapp Group –ஐ official Group- ஆக மாற்றலாம் என்றும், TANRECTA Friends - என்ற புதிய “Whatsapp” Group ஆரம்பித்து, அதில் அனைவரும், தங்கள் கருத்துக்கள் / செய்திகளைப் பதிவிட்டுக் கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.
3. சங்கத்தின் கடந்த 3–ஆண்டு பணிகளையும், சங்க நிதி இருப்பு விவரங்களையும் தொகுத்து, அடுத்த கூட்டத்தில் உறுப்பினர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது.





President of our unit. He explained in detail about the stages of the pension revision for the retirees before 2006. The new staff taken charge of this section in the sub treasury Pramathy assured that she will be able to clear the pending files within two months since she was aware of the procedures involved in the preparation of the pension revision files.

The President informed about the forthcoming Annual Conference of TANRECTA at Thanjavur 0n 28th September, 2019 and requested the members to participate in large numbers to make the conference a grand success. He told that totally 1 Colour Full Page Advertisement, 6 Full page Black and white and 7 Half page black and white advertisements were sent to the souvenir committee for publication in the souvenir. He appreciated the members for taking all efforts as before for the collection of advertisements. 12 members present in the meeting immediately confirmed their participation in the conference at Thanjavur. It is expected that the number may go upto 20 in the mean time.

The secretary who was on the Religious and Cultural Tour to 15 European countries like Uk, Paris, Switzerland, Germany etc. in fifteen days and one week tour to china has shared his experiences during his stay and visit in the foreign countries like Meg Lav Train which attained the highest speed of 431 KMs/Hr and the Bullet Train between Shangai and Beijing, 1400 KMS crossed in 4 and half hours at a speed of 352 KMS/Hr.

In this month our members Dr. V. Chandrasekaran, Prof. C. Loganathan and Prof. N. Samban celebrated their Wedding Day and Prof. K. Durairaj celebrated his Birth Day. The dinner was hosted jointly by Dr. V. Chandrasekaran, Prof. C. Loganathan and Prof. N. Samban . The members present greeted them for their generous contribution to the dinner.

After the vote of thanks by the Vice President Prof. N. Samban the meeting came to an end. **The next meeting is scheduled to be held on 12th October, 2019 at the same venue and at the same time.**

**Dr. T.P.J. BHARATHI**
Paramathi vellur unit, Secretary

## CHENNAI UNIT

91 members attended the meeting. Prof. V. Swaminathan presided.

The president gave details of the AIFRUCTO National executive committee meeting held at Hyderabad on I September, 2019. He explained in detail the follow up done on individual issues of members, pending at the RJDCE office, Chennai. He also informed the house about the address list of the members of our unit which was updated and which will be

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



published in the tanrecta souvenir to be released in connection with the annual conference at Thanjavur.

The secretary informed the house about the State executive meeting of tanrecta at Trichy on 17.09.2019. He requested the members to pass on the list of issues and resolutions to be presented on behalf of the unit at the state executive and the general council of tanrecta at Thanjavur.

Although pension revision has been completed for the majority of members, a few individuals were yet to get the benefits of pension revision. If the members came forward giving details of where their issue was pending (at college or RJDCE/ DCE or PPO or Treasury), tanrecta will be able to pursue the papers and ensure that favourable orders are issued.

At the national level, the file relating to the concordance table for pay / pension revision of college and university teachers, was doing the final rounds in UGC / MHRD and orders are expected soon. The table is expected to include the suggestion of AIFRUCTO for equating 19 years and 22 years of service for fixation of pension in the minimum of the scales of Associate Professor and Professor namely academic levels 13A and 14 in the pay Revision order issued by the MHRD with the minimum pension of 65700 and 72100 respectively. If the concordance table does not contain this provision, there will be no benefit for teachers who retired with long years of service in the earlier pay revision periods.

At the Tamilnadu state level, the issue relating to the 86-88 retirees is still painfully pending in the finance Department and members who retired during 86-88 are now in their nineties, only a few of them survive, anxiously awaiting the resolution of the issue.

The issue relating to the modified option I for Pension fixation (Formulation I) is not live in Tamilnadu as the state government is in no mood to relent on this issue. Members were requested to attend the Thanjavur conference in large numbers and ensure its success. The meeting ended with vote of thanks by the vice president.

**Next meeting on 12.10.2019, at 4pm in Quaid e millath college**

**R. Lawrence Manoharan,**
Secretary, Chennai unit, 90877 25798.

## PUDUKKOTTAI UNIT

The general body of this unit met on 8.9.19. The secretary briefed the members about the matters discussed in the state executive meeting on 17.9.19 and requested the members to come to the state conference in large numbers.





The unit wished the following members who celebrate their birth days on this month. Professors S.Nachiappan, Dr.E.J.John jeyakumar, M.Shanmugam, T.K.Marimuthu and Dr.P.Suryanarayanan.Prof. S.Viswanathan proposed vote of Thanks.

**Manivannan.G.**
Secretary Pudukkottai unit

## மதுரை கிளை

09-09-2019 அன்று காலை 11.00 மணிக்கு, மூட்டா அலுவலகம், பேரா. V. சண்முக சுந்தரம் அரங்கில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்திற்கு, தலைவர் பேரா. C.K. மதுரம், தலைமை தாங்கி, அனைவரையும் வரவேற்றனர். கூட்டத்தில் 58 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பேரா. K.V. ஆனந்தன் அவர்களின் தாயார் மறைவிற்கும், முன்னாள் மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி மற்றும் உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ராம் ஜேத்மலானி முதலானோரின் மறைவிற்கும், உறுப்பினர்கள் 2 நிமிடம், எழுந்து நின்று அமைதி காத்து, அஞ்சலி செலுத்தினர். இந்த மாதம் பிறந்தநாள் கொண்டாடும் பேராசிரியர்களின் பெயரை, செயற்குழு உறுப்பினர் முனைவர் R. சுப்புராம் வாசிக்க, உறுப்பினர்கள் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். அவர்கள் (4 பேர்) கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டனர்.

புதிய உறுப்பினர்கள் முனைவர் வீ. கோபால், திரு. S. கோபாலகிருஷ்ணன் குடும்ப ஓய்வூதியர், தங்களை இப்பேரியக்கத்தில் இணைத்துக் கொண்டனர். சென்ற மாத இயக்க நடவடிக்கைகளை செயலாளர் பேரா. ராமமூர்த்தி, தனது அறிக்கையில் இம்மாதம் நடைபெறவிருக்கின்ற மாநில மாநாடு வெற்றி பெற, அனைவரும் ஒத்துழைக்கக் கேட்டுக் கொண்டார். விழா மலரில், அதிக எண்ணிக்கையில் (54 பேர்) விளம்பரங்கள் கொடுத்துள்ளதற்கு நன்றி தெரிவித்தார். செயலாளர் G. ராமமூர்த்தி, முன்னாள் செயலாளர் A. ஜோசப் ஆண்டனி மற்றும் முன்னாள் தலைவர் மகாதேவன் அவர்களும், விழா மலரில் கட்டுரை எழுதியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. 2018 - 19ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் எண்ணிக்கையை இறுதி செய்ய, உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாநில மாநாட்டில் 35 உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருப்பதாக, செயலாளர் கூறினார். அதற்கான பயண ஏற்பாடுகளை பேரா. ஜோசப் ஆண்டனி, பேரா. ராமமூர்த்தியும் ஏற்பாடு செய்வதாகக் கூறினர். மூட்டா அலுவலகத்தில், ஓய்வு பெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் நலச்சங்கம் நடத்திய, "தேசிய கல்வி கொள்கை" பற்றிய கருத்தரங்கில் செயலாளர் G. ராமமூர்த்தி கலந்து கொண்டது பற்றி தெரிவிக்கப்பட்டது.

கருவூல அலுவலகத்தில், குடும்ப ஓய்வூதியர் S. கோபாலகிருஷ்ணனுக்கு, விரைவில் ஓய்வூதிய நிலுவை வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது பற்றி,